இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2023

# முரசொலி

Murasoli

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 94 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – ஐப்பசி 26 – ஞாயிற்றுக்கிழமை 12 நவம்பர் 2023 – கோவை ★★ 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 94 : Thiruvalluvar Year - 2054 - Ayppasi 26 - Sunday 12 November 2023 - Kovai ★★ 8 Pages ₹5.00




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (10.11.2023) சென்னை கலைவாணர் அரங்கத்தில், நடைபெற்ற விழாவில், புதிய பயனாளிகளாக தேர்ந்தெடுக்கப்பட்ட 7 இலட்சத்து 35 ஆயிரம் மகளிர் பயன்பெறும் வகையில், மகளிருக்கு மாதந்தோறும் ரூ.1000/– வழங்கிடும் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தை தொடங்கி வைத்து அடையாளமாக 6 மகளிருக்கு வங்கி பற்று அட்டைகளை (ATM Cards) வழங்கினார். இந்நிகழ்ச்சியில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் தயாநிதிமாறன், கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் டாக்டர் ஜெ.ராதாகிருஷ்ணன், சிறப்பு திட்டசெயலாக்கத்துறை செயலாளர் டாக்டர் தாரேஸ் அகமது, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம்

# நாட்டிற்கே முன்னுதாரணத் திட்டம்!

## புதிதாகக் கண்டறியப்பட்ட 7.35 லட்சம் பயனாளிகளுக்கு உரிமைத் தொகை வழங்கும் நிகழ்ச்சியில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பெருமிதம்!

**சென்னை, நவ.12-**

**“கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம், நாட்டிற்கே முன்னுதாரணத் திட்டம்” என புதிதாகக் கண்டறியப்பட்ட 7.35 லட்சம் பயனாளிகளுக்கு உரிமைத் தொகை வழங்கும் நிகழ்ச்சியில் உரையாற்றியபோது முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பெருமிதத்துடன் குறிப்பிட்டார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (10.11.2023) சென்னை, கலைவாணர் அரங்கில் நடைபெற்ற கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தின் கீழ் கூடுதல் பயனாளிகளுக்கு உரிமைத் தொகை வழங்கும் விழாவில் ஆற்றிய உரை வருமாறு:-

கடந்த சில நாட்களாக காய்ச்சலும், தொண்டை வலியும் எனக்கு இருந்தது. இப்போது காய்ச்சல் குறைந்துவிட்டாலும், தொண்டை வலி மட்டும் இருக்கிறது. என்னுடைய குரலைக் கேட்கும்போதே உங்களுக்கு நன்றாகத் தெரியும். அதனால்தான், சில நாட்களாக வீட்டிலேயே முழு ஓய்வு எடுத்துக்கொண்டேன். இந்த வாரம் முழுக்க ஓய்வெடுக்கவேண்டும் என்று என்னுடைய மருத்துவர்கள் சொன்னாலும், என்னால் மக்களைச் சந்திக்காமல் இருக்க முடியவில்லை! அதனால்தான், தமிழ்நாடு முழுவதும் அனைத்து மாவட்டங்களிலிருந்து காணொலிக் காட்சி மூலமாக இணைந்திருக்கின்ற உங்களை எல்லாம் நான் பார்க்க வந்துவிட்டேன்.

**உங்களை விட எனக்குத்தான் அதிக மகிழ்ச்சி!**

தொண்டை வலி இருந்தாலும், தொண்டில் தொய்வு ஏற்படக் கூடாது! அதனால்தான் வந்துவிட்டேன். உங்களைப் பார்க்கும்போது என்னுடைய உடல் வலி எல்லாம் குறைந்து மனது மகிழ்ச்சியில் நிறைந்து விட்டது!

இந்த ஆயிரம் ரூபாயை வாங்கும்போது உங்களுக்கு ஏற்படுகின்ற மகிழ்ச்சியைவிட, கொடுக்கும் போது, எனக்குத்தான் அதிகமான மகிழ்ச்சி ஏற்படுகிறது. அந்த மகிழ்ச்சியைவிட சிறந்த மருந்து எதுவாக இருக்க முடியும்? அதனால்தான், மருத்துவர்கள் அறிவுரையையும் மீறி இந்த விழாவுக்கு வந்துவிட்டேன்.

### ‘தொடர்ந்து பாடுபடுகிறார் உதயநிதி ஸ்டாலின்!’ முதல்வர் மு.க.ஸ்டாலின் பாராட்டு!



**இந்தத் திட்டத்திற்குப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் தம்பி உதயநிதி அவர்கள், அரசு அலுவலர்களுடன் இந்தத் திட்டச் செயல்பாடு குறித்து தொடர்ந்து ஆய்வுக் கூட்டங்கள நடத்திக்கொண்டே இருப்பார். அவருக்கும் என்னோட வாழ்த்துகள். தொடர்ந்து களத்திலும் ஆய்வு செய்துகொண்டு இருக்கிறார். அது இனியும் தொடரும். அதில் எந்தவித சந்தேகமும் உங்களுக்கு இருக்க வேண்டிய அவசியமில்லை.**

குடும்பத் தலைவிகளுக்கு ஆயிரம் ரூபாய் உரிமைத் தொகை வழங்கப்படும் என்று தேர்தலுக்கு முன்பாகவே சொன்னோம். அப்போது சிலர் என்ன என்ன சொன்னார்கள் என்றால், “இதெல்லாம் நிறைவேற்ற முடியாத வாக்குறுதி”, “இவர்கள் ஆட்சிக்கு வரவே மாட்டார்கள்” இது மாதிரி ஒவ்வொருவரும் நிறைய சொன்னார்கள். கட்டம் எல்லாம் பார்த்தார்கள். ஆனால், நீங்கள் எல்லோரும் என்ன சொன்னீர்கள்? “தி.மு.க.தான் ஆட்சிக்கு வரவேண்டும்” “தி.மு.க. சொன்னால், சொன்னதை நிறைவேற்றும். கலைஞர் மகன் ஸ்டாலின் தான் முதலமைச்சராக வரவேண்டும்” என்று ஓட்டு போட்டு பதிலடி தந்தீர்கள். உங்களின் கட்டளைக்குக் கட்டுப்பட்டவன் நான்! இந்த முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் சொன்னால், சொன்னதை நிச்சயம் செய்வேன்! அதற்கு அடையாளமாகதான், மாதந்தோறும் கலைஞர் மகளிர் உரிமைத் தொகையை வழங்குகிறோம். அதனால்தான் உங்கள் முன்னால் கம்பீரமாக நின்று கொண்டிருக்கிறேன்!

**இன்றைக்கு மாலைக்குள் வந்துவிடும்!**

கடந்த செப்டம்பர் 15ஆம் நாள் பேரறிஞர் பெருந்தகை பேரறிஞர் அண்ணா அவர்கள் பிறந்த காஞ்சிபுரத்தில் இந்தத் திட்டத்தை தொடங்கி வைத்தேன். செப்டம்பர் 15, அக்டோபர் 15 என்று இரண்டு மாதங்களுக்கான 2000 ரூபாயை, ஒரு கோடியே ஆறு இலட்சம் சகோதரிகள் வாங்கிவிட்டார்கள். இந்த முறை முன்கூட்டியே இன்றைக்கு மாலைக்குள் அடுத்த ஆயிரம் ரூபாயும் உங்களுக்கு வந்து சேர்ந்துவிடும்.

மகளிருக்கு, சொத்துரிமை, கல்வி, வேலைவாய்ப்பு, உள்ளாட்சி அமைப்புகளில் இடஒதுக்கீடு கொடுத்து உங்களுடைய உரிமைகளுக்காக, பாதுகாவலராக இருந்த தமிழினத் தலைவர் கலைஞருடைய நூற்றாண்டில் தொடங்கி கொடுக்கப்படுகிற இந்த தொகை, உதவித்தொகை இல்லை; உரிமைத்தொகை! இந்த உரிமைத் தொகை உண்மையிலேயே தேவையும், தகுதியும் உள்ள அனைத்து

**தொடர்ச்சி 4 ஆம் பக்கம்**

## ஆளுநரின் செயல்பாடுகள் கவலை அளிக்கிறது!

# ஆளுநர் ஆர்.என்.ரவி - ஒன்றிய அரசுக்கு நோட்டீஸ்!

## உச்சநீதிமன்றம் அனுப்பியது!

புதுடெல்லி, நவ. 12-

ஆளுநருக்கு எதிராக தமிழ்நாடு அரசு தொடர்ந்த வழக்கில் விளக்கம் அளிக்குமாறு ஒன்றிய அரசுக்கு உச்சநீதிமன்றம் நோட்டீஸ் அனுப்பியுள்ளது. ஆளுநர் ஆர்.என்.ரவியின் செயல்பாடு மிகவும் கவலையளிப்பதாகவும், சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்ட மசோதாக்களை ஆளுநர் கிடப்பில் போட முடியாது என்றும் நீதிபதிகள் தெரிவித்துள்ளனர்.

எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்களின் செயல்பாடுகளுக்கு முட்டுக்கட்டை போடும் வகையில், ஆளுநர்களின் செயல்பாடுகள் அண்மைக் காலமாக அதிகரித்து வருகின்றன. தமிழ்நாடு சட்டப்பேரவையில் நிறைவேற்றி அனுப்பிவைக்கப்பட்ட 12 மசோதாக்களுக்கு ஒப்புதல் அளிக்காமல் ஆளுநர் ஆர்.என்.ரவி கிடப்பில் போட்டுள்ளார்.

இந்நிலையில், ஆளுநர் ஆர்.என். ரவிக்கு எதிராக உச்சநீதிமன்றத்தில் தமிழ்நாடு அரசு தரப்பில் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அந்த மனுவில், மாநில பல்கலைக்கழகம் மற்றும் சென்னை பல்கலைக்கழக துணை வேந்தர்களை நியமிக்கும் அதிகாரத்தை மாநில அரசுக்கு வழங்கும் மசோதா, தமிழ்நாடு சித்த மருத்துவப் பல்கலைக்கழகத்தை உருவாக்குவது தொடர்பான மசோதா, அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழக துணைவேந்தரை தமிழ்நாடு அரசே நியமிக்க அதிகாரம் அளிக்கும் மசோதா உள்ளிட்டவற்றை ஆளுநர் ஆர்.என்.ரவி கிடப்பில் போட்டுள்ளதாக கூறப்பட்டுள்ளது. அரசின் கோப்புகளுக்கு ஒப்புதல் அளிக்காமல் வேண்டுமென்றே காலதாமதப்படுத்துவது சட்டவிரோதம் என அறிவிக்க வேண்டும் என்றும் மனுவில் தமிழ்நாடு அரசு வலியுறுத்தியுள்ளது.

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுக்கு எதிராக செயல்படுவதன் மூலம், தமிழ்நாட்டு மக்களின் உரிமைகளை ஆளுநர் ஆர்.என். ரவி பறித்து வருவதாகவும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இதுதவிர, அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர்கள் சி.விஜயபாஸ்கர், பி.வி.ரமணா மீதான குட்கா ஊழல் வழக்கில் நீதிமன்ற விசாரணையை தொடங்க சி.பி.ஐ. கோரிய அனுமதிக்கான கோப்புகளிலும் கையெழுத்திடாமல் உள்ளார். கே.சி.வீரமணி, எம்.ஆர்.விஜயபாஸ்கர் மீது நீதிமன்ற விசாரணையை தொடங்கிட ஊழல் தடுப்பு, கண்காணிப்பு இயக்குநரகம் இசைவு ஆணை கோரிய கோப்பிலும் ஆளுநர் கையெழுத்திடாமல் உள்ளார்.

இதனிடையே, டி.என்.பி.எஸ்.சி. தலைவர், உறுப்பினர்கள் நியமன விவகாரத்திலும் தமிழ்நாடு அரசின் நடவடிக்கைகளுக்கு முரணாக

**தொடர்ச்சி 4 ஆம் பக்கம்**

# ஆளுநர் தீயுடன் விளையாடுகிறார்!

## பஞ்சாப் ஆளுநருக்கு எதிரான வழக்கில் உச்சநீதிமன்றம் கண்டனம்!

புதுடெல்லி, நவ. 12 –

‘சட்டமன்றத்தால் நிறைவேற்றி அனுப்பிவைக்கப்படும் மசோதாக்களை கிடப்பில் போடும் ஆளுநர்களின் செயல் ஜனநாயகத்துக்கு ஆபத்தானது’ என்று உச்சநீதிமன்றம் கண்டனம் தெரிவித்துள்ளது. ‘ஆளுநர் தீயுடன் விளையாடுகிறார்’ என்றும் உச்சநீதிமன்றம் தெரிவித்துள்ளது.

பஞ்சாப் ஆளுநருக்கு எதிராக அம்மாநில அரசு உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளது. இந்த வழக்கு தலைமை நீதிபதி தலைமையிலான அமர்வில் நேற்று முன்தினம் மீண்டும் விசாரணைக்கு வந்தது.

“மசோதாக்களை எத்தனை நாட்களுக்குத்தான் ஆளுநர் இப்படி கிடப்பில் போட்டிருப்பார்?” என்று நீதிபதிகள் கேள்வி எழுப்பினர்.

“ஆளுநர் தீயுடன் விளையாடுகிறார். சட்டமன்றம் கூட்டப்பட்ட முறை சரியல்ல என்று கூறி மசோதாக்களுக்கு ஒப்புதல் அளிக்க முடியாது என்று ஆளுநர் எப்படி கூறமுடியும்? மக்களால் தேர்வு செய்யப்பட்ட சட்டமன்றத்தின் மசோதாக்களுக்கு ஒப்புதல் அளிக்க முடியாது என்று எப்படி கூறமுடியும்? இது மிகவும் கவலை அளிக்கும் விவகாரம்” என்று நீதிபதிகள் வேதனை தெரிவித்தனர்.

“நாம் நாடாளுமன்ற ஜனநாயகத்தைத்தான் தொடர்கிறோமா? சபாநாயகர் சட்டமன்றத்தைக் கூட்டியது தவறு என்று எப்படிச் சொல்ல முடியும்? எந்த அதிகாரத்தின் அடிப்படையில் ஆளுநர் அப்படி கூறினார்?” என்றும் பஞ்சாப் ஆளுநருக்கு உச்சநீதிமன்றம் சரமாரியாக கேள்வி எழுப்பியது. “சட்டமன்றம் கூட்டப்பட்டது சரியல்ல என்று கூறி, 4 மசோதாக்களை நிலுவையில் வைத்திருக்க முடியாது. இதுபோன்ற அதிகாரங்களை ஆளுநர்கள் கையில் எடுக்க முடியாது. இது ஜனநாயகத்துக்கு ஆபத்தானது” என்று உச்சநீதிமன்ற நீதிபதிகள் தெரிவித்தனர்.

“ஆளுநர்களுக்கு சில அதிகாரங்கள் உள்ளன. அதற்காக மசோதாக்களை கிடப்பில் போட முடியாது” என்றும் உச்சநீதிமன்ற நீதிபதிகள் குறிப்பிட்டனர்.

இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
ஞாயிற்றுக்கிழமை 12-11-2023

# ‘ஆரிய’ விகடனின் ‘சனாதன’ அலறல்

‘திராவிட மாடலின் சமூக (அ)நீதி’ - என்ற தலைப்பில் ‘ஆரிய’ விகடன் அலறி இருக்கிறது. திடீரென பட்டியலின சமூகத்தவர்மீது இவர்களுக்குப் பாசம் பொங்கி வழிகிறது. ‘என்னவாக இருக்கும்’ என்று பார்த்தால், அவர்களால் ‘கொண்டையை’ மறைக்க முடியாதது அந்தத் தலையங்கத்திலேயே இருக்கிறது.

தமிழ்நாட்டில் நடந்த மூன்று சம்பவங்களை விவரிக்கும் அந்தத் தலையங்கத்தின் உள்நோக்கம் என்ன தெரியுமா?

மாண்புமிகு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், மக்களைப் பிளவுபடுத்தும் சனாதனக் கோட்பாட்டுக்கு எதிராக வலிமையான வாதங்களை எடுத்து வைக்கிறார் அல்லவா? அது விகட ஆரியக் கூட்டத்தை கோபம் கொள்ள வைக்கிறது. “மனிதத் தன்மையற்ற இந்த தாக்குதல்களையும் வன்கொடுமைகளையும் கண்டும் காணாமல் மௌனம் சாதித்து வேடிக்கை பார்க்கிறது முதல்வர் ஸ்டாலின் தலைமையிலான தமிழ்நாடு அரசு. இது இப்படி இருக்க ‘சனாதன தர்மத்தை ஒழிப்போம்’ என்று உதயநிதி ஸ்டாலின் பேசுவது வெட்டி அரசியல் பேச்சு. பெரியார், அறிஞர் அண்ணா கோரிய சமூகநீதிக்கு திமுக அரசு செய்யும் துரோகம் இது” என்று ஆரிய விகடன் அலறுகிறது.

மக்களைப் பிளவுபடுத்தும் வர்ண சனாதனக் கோட்பாடுகளுக்கு எதிராகப் பேசியது மட்டுமல்ல; அதைத் திரும்பப் பெற மாட்டேன் என்று துணிச்சலாக நிற்கிறாரே அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் என்ற வன்மத்தை ‘திராவிட மாடல்’ ஆட்சியின் மீது காட்டுகிறது விகடன்.

**‘எல்லார்க்கும் எல்லாம்’ என்ற தத்துவத்தின் அடிப்படையில் அனைவர்க்கும் அனைத்தும் கிடைக்க வழிவகை செய்யும் ‘திராவிட மாடல்’ ஆட்சியால் அலறிக் கொண்டிருக்கிறது ஆரியக் கும்பல். அதனுடைய அலறலைத் தான் ஆளுநர் ரவியின் குரலில் நாம் காண்கிறோம். சில நாட்களுக்கு முன்னால் ரவி என்ன சொன்னாரோ, அதையேதான் விகடனும் ‘தலையங்கம்’ என்ற பெயரால் வாந்தி எடுத்துள்ளது. இந்தக் கும்பலுக்கு ஒட்டுமொத்தமாக ‘ஒரே கண்டெண்ட் எடிட்டர்’ இருக்கிறார் என்பது நமக்குத் தெரியாதா என்ன?**

பட்டியலின மக்கள் மீது நடந்த சில சம்பவங்களை எடுத்துப் போட்டு – தாங்கள் ஏதோ ஒடுக்கப்பட்ட மக்களின் ஒளிவிளக்கைப் போல விகடன் காட்டிக் கொள்கிறது. இந்தச் சம்பவங்களின்போது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதை மறைத்து – இவை எதற்கும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்ற தோற்றத்தை உருவாக்குகிறது அந்தத் தலையங்கம்.

★ நெல்லை தச்சநல்லூர் காவல் நிலைய எல்லைக்குள் – குளித்து விட்டு வந்தவர்களிடம், பணத்தைக் கேட்டும், சாதியைக் கேட்டும் தகராறு செய்து இருவரைத் தாக்கிய சம்பவத்தில் ஆறுபேர் கைது செய்யப்பட்டு குண்டர் தடுப்புச் சட்டத்தில் சிறையில் தள்ளப்பட்டுள்ளார்கள். கொடும் காயம் ஏற்படுத்துதல், ஆயுதங்களால் தாக்கிக் காயம் ஏற்படுத்துதல், வழிப்பறியில் ஈடுபடுதல், வன்கொடுமைத் தடுப்புச் சட்டம் ஆகிய பிரிவுகளில் வழக்கு போடப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்ட இருவருக்கும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை மூலம் வழங்கப்படும் முதல்கட்ட நிதி வழங்கப்பட்டுள்ளது.

★ நாங்குநேரியில் மாணவரும், அவரது சகோதரியும் வெட்டப்பட்டார்கள். 3 சிறுவர் உட்பட ஏழு பேர் கைது செய்யப்பட்டனர். 11 பிரிவுகளில் வழக்குப் பதியப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்ட அந்தக் குடும்பத்துக்கு 3 லட்சம் ரூபாய் உடனடியாகத் தரப்பட்டது. உடனடியாக சபாநாயகரும் அமைச்சர்களும் சென்று பார்த்தார்கள். அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், அந்த இருவரையும் சமீபத்தில் பார்த்து ஆறுதல் கூறினார்.

★ கிருஷ்ணகிரி அருகே சோக்காடியில் நடந்த சம்பவத்தில் 13 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இந்த விவகாரத்துக்குக் காரணமான அ.தி.மு.க. ஒன்றியச் செயலாளர் தலைமறைவாக இருக்கிறார். பிரச்சினையே இவரால் வந்தது தான். இவரது பெயரையே சொல்லாமல் தலையங்கம் தீட்டியதுதான் ‘விகடனின்’ பத்திரிக்கா தர்மம்!

★ புதுக்கோட்டை கொப்பம்பட்டி மாணவர் தற்கொலையில் வன்கொடுமைச் சட்டப்படி வழக்குப் பதியப்பட்டுள்ளது.

★ வேங்கைவயல் சம்பவம் தொடர்பாக நீதிபதி ஆணையம் அமைக்கப்பட்டுள்ளது. எனவே அதுகுறித்து இங்கு எழுதுவது சரியாக இருக்காது.

★ பள்ளிகளில் மாணவர்கள் மத்தியில் சாதிப்பிளவுகள் ஏற்படுவதைத் தடுக்கும் வகையில் தகுந்த பரிந்துரைகளை வழங்க, ஓய்வுபெற்ற நீதிபதி சந்துரு தலைமையில் ஆணையம் அமைக்கப்பட்டுள்ளது.

– இப்படி அனைத்துக் குற்றச் சம்பவங்களிலும் குற்றம் சாட்டப்பட்டவர்கள் கைது செய்யப்பட்டுள்ளார்கள். கைது செய்யவில்லை என்றாலோ, அல்லது குற்றவாளிகள் காப்பாற்றப்பட்டு இருந்தாலோ அதுகுறித்து தலையங்கம் எழுதி அரசுக்கு அறிவுறுத்தலாம். செய்திகளை வரிசைப்படுத்தி, அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகளைத் தந்திரமாக மறைக்கிறது ‘விகடன்’ தலையங்கம்.

**உண்மையில் இவர்களுக்கு சமூகநீதியில் அக்கறை இருக்குமானால், ‘சாதியை ஆதரித்தும் – மற்ற சாதிகளை இழிவுபடுத்தியும்’ பேசும் ‘திருச்சி கல்யாணராமன் போன்றவர்களை ஏன் கைது செய்யவில்லை?’ என்று கேட்க முடியுமா? ‘சனாதனம்’ என்ற பெயரால்தான் இந்த சாதிவன்ம வார்த்தைகள் கொட்டப்படுகின்றன. இதுபோல பல நூறு வீடியோக்கள் இணையத்தளங்களில் வலம் வருகின்றன. ‘திராவிட மாடல் ஆட்சி இந்தச் சாதி வன்மப் பேர்வழிகளை ஏன் கைது செய்யவில்லை?’ என்று கேட்கும் ‘சமூக நீதி உள்ளம்’ விகடனுக்கு உண்டா? கலைஞர் கேட்பாரே; ‘உள்ளம் இருக்கிறதா? உள்ளம் இருக்க வேண்டிய இடத்தில் பள்ளம் இருக்கிறதா?’ என்று!**

‘திராவிட மாடல்’ ஆட்சி நடத்தும் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு யாரும் சமூகநீதிப் பாடம் எடுக்கத் தேவையில்லை. யார் சொல்லியும் அல்ல; அவராகவே செய்யும் அக்கறையும், கொள்கைப் பற்றும் அவருக்கு உண்டு.

★ ஆட்சிக்கு வந்ததும் ஆதிதிராவிடர் – பழங்குடியினர் ஆணையத்தை அமைத்தவர் முதலமைச்சர் அவர்கள்.

★ அ.தி.மு.க. ஆட்சியில் கூட்டப்படாத மாநில விழிப்புணர்வுக் கூட்டத்தைத் தொடர்ந்து கூட்டி வருபவர் முதலமைச்சர் அவர்கள்.

★ அண்ணல் அம்பேத்கர் பிறந்த ஏப்ரல் 14 ஆம் தேதியை ‘சமத்துவ நாளாக’ அறிவித்த ஆட்சி திராவிட மாடல் ஆட்சி.

★ அண்ணல் அம்பேத்கர் மணிமண்டபத்தில், அவரின் முழு அளவு வெண்கலச் சிலை நிறுவப்பட்டுள்ளது.

★ அண்ணல் அம்பேத்கரின் சிந்தனைகளைப் பரப்புவதற்காக அவரின் படைப்புகளை தமிழில் மொழி பெயர்க்க இந்த நிதியாண்டில் ரூ.5 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது.

★ அண்ணல் அம்பேத்கர் விருதுத் தொகை ரூ.5 லட்சமாக ஆக்கப்பட்டுள்ளது.

★ வன்கொடுமைகளால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்படும் தீருதவித் தொகை குறைந்தபட்சம் 85,000 ரூபாயிலிருந்து ஒரு இலட்சம் ரூபாயாகவும் அதிகபட்சம் 8 இலட்சத்து 25 ஆயிரம் ரூபாயிலிருந்து 12 இலட்சம் ரூபாயாகவும் உ யர்த்தப்பட்டது.

★ வன்கொடுமையினால் பாதிக்கப்பட்டோரின் குடும்பத்தைச் சார்ந்த 723 நபர்களுக்கு கருணை அடிப்படையில் பணி நியமனம், கல்வி உதவித்தொகை, வீட்டுமனைப் பட்டா ஆகிய உதவிகளும் வழங்கப்பட்டுள்ளன.

★ வன்முறையால் பாதிக்கப்பட்டோரைச் சமூகக் கண்ணோட்டத்துடன் அணுகி, அவர்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்திட காவல்துறை மற்றும் வருவாய்த் துறை அலுவலர்களுக்கு விழிப்புணர்வுப் பயிற்சிகள் வழங்கப் பட்டு வருகின்றன.

★ ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு எதிராக நடைபெறும் குற்றங்கள் மற்றும் அவர்களுக்கு வழங்கப்பட வேண்டிய தீருதவிகள் மற்றும் மறுவாழ்வு தொடர்பான வழக்குகளை விரைந்து முடிக்க கூடுதலாக நான்கு நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டுள்ளது.

★ சாதி வேறுபாடுகளற்ற மயானங்களை பயன்பாட்டில் கொண்டிருக்கும் முன்மாதிரிச் சிற்றூர்களில், வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்ள ஊக்கத் தொகையாக தலா ரூ.10 லட்சம் பரிசு வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. கடந்த நிதியாண்டில் 70 சிற்றூர்கள் இத்திட்டத்தின் கீழ் பயன்பெற்றுள்ளன.

★ தீண்டாமையைக் கடைபிடிக்கப்படாமல் பொதுமக்கள் அனைவரும் நல்லிணக்கத்துடன் வாழும் கிராமங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, அக்கிராமங்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளை ஏற்படுத்திடும் பொருட்டு ரூ.10 இலட்சம் நிதி வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் கடந்த நிதியாண்டில் 37 கிராமங்கள் பயனடைந்துள்ளன.

★ பொதுமக்களிடையே தீண்டாமைக்கெதிரான விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காக, ஆண்டுதோறும் ஜனவரி மாதம் 24-ஆம் தேதி முதல் 30-ஆம் தேதி வரை “மனிதநேய வார விழா” நடத்தப்படுகிறது.

★ ஆண்டுதோறும் ஜனவரி 26, ஆகஸ்டு 15 மற்றும் அக்டோபர் 2 ஆகிய நாட்களிலும், அந்தந்த மாவட்டங்களில் முக்கியத்துவம் வாய்ந்த உள்ளூர் விடுமுறை நாட்களிலும் சமத்துவ விருந்து ஏற்பாடு செய்யப்படுகிறது.

★ **ஆதிதிராவிட மக்களின் கல்வியறிவு விகிதம் (73.26%) ஒப்பீட்டளவில் பொதுப் பிரிவினரின் கல்வியறிவு விகிதத்தினை (80.09%) விட குறைவாக உள்ளது. எனவே இத்துறைக்கான மொத்த நிதி ஒதுக்கீடான ரூ.3,512.85 கோடியில்; கல்விசார்ந்த திட்டங்களுக்காக மட்டும் ரூ.2,206.70 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

★ **ஆதிதிராவிடர் நலத் துறையால் 1138 ஆதி திராவிடர் நலப் பள்ளிகள் மேம்பாட்டுக்காக ரூ.120 கோடி சென்ற ஆண்டு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

★ இத்துறையால் நடத்தப்படும் விடுதிகளைப் பழுது பார்க்க ரூ.25 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

★ எம்.சி.இராஜா கல்லூரி விடுதி வளாகத்தில் ரூ.44.50 கோடி மதிப்பீட்டில் 10 தளங்களுடன் நவீன வசதியில் புதிய விடுதிக் கட்டடம் கட்ட முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டி இருக்கிறார்கள்.

★ முனைவர் பட்டப்படிப்பிற்கான உதவித் தொகைத் திட்டத்தின் கீழ் இதுவரை 2,954 மாணவர்களுக்கு தலா ஒரு லட்சம் ரூபாய் வீதம் கல்வி உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது.

★ வெளிநாடுகளில் சென்று உயர்கல்வி பயிலும் மாணவர்களுக்கான வருமான உச்ச வரம்பு ரூ.8 இலட்சம் ஆக உயர்த்தப்பட்டு, 18 மாணவர்களுக்கு கல்வி உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது.

★ தாட்கோ மூலம் செயல்படுத்தப்படும் பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களின்கீழ் பயனடைவதற்கான வருமான உச்சவரம்பு மூன்று இலட்சம் ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது.

★ ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின தொழில் முனைவோரின் பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிக்கும் வகையில் ‘அண்ணல் அம்பேத்கர் தொழில் முன்னோடிகள் திட்டம்’ என்னும் புதிய திட்டம் ரூ.100 கோடி செலவில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

★ ஆதிதிராவிடர் குடியிருப்புகளை மேம்படுத்த “அயோத்திதாச பண்டிதர் குடியிருப்புகள் மேம்பாட்டுத் திட்டம் வரும் ஐந்தாண்டுகளில் 1000 கோடி ரூபாய் செலவில் செயல்படுத்தப்படவுள்ளது.

★ புதிரை வண்ணார் நல வாரியத்திற்குப் புத்துயிர் அளித்து, வாழ்வாதார மேம்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ள இந்த நிதியாண்டில் ரூ.10.00 கோடி கூடுதல் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

★ **இந்த நிதியாண்டில் மாநில திட்ட ஒதுக்கீடான ரூ.77,930.30 கோடியில், ஆதிதிராவிடர் துணைத் திட்டத்திற்காக ரூ.17,075.70 கோடி(21.91%) மற்றும் பழங்குடியினர் துணைத் திட்டத்திற்காக ரூ.1595.89 கோடி (2.05%) ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இது மாநிலத்தில் உள்ள ஆதிதிராவிடர் (20.01%) மற்றும் பழங்குடியின மக்கள் தொகை (1.17%) விகிதாச்சாரத்தை விட அதிகமானதாகும்.**

– இதுதான் ‘திராவிட மாடல் ஆட்சி’யின் சமூக நீதி ஆகும்.

முதலமைச்சர் அவர்களே குறிப்பிட்டுள்ளதைப் போல, ‘சுயமரியாதைச் சமதர்மச் சமூகத்தை உருவாக்குவதற்கு இன்னும் நெடுந்தூரம் பயணிக்க வேண்டும்’ என்பதும் உண்மைதான். அதற்கான சட்டங்களையும் முதலமைச்சர் தீட்டி வருகிறார்கள். மனமாற்றப் பரப்புரைகளையும் தமிழ்நாடு அரசு செய்து வருகிறது. இதையெல்லாம் தாங்கிக் கொள்ள முடியவில்லை ‘ஆரிய’ விகடக் கும்பலால்.

**அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம் என்பது போன்ற சட்டங்களாலும் – மக்களைப் பிளவுபடுத்தும் சனாதனத்துக்கு எதிரான யுத்தங்களாலும் – நெருக்கடிக்கு உள்ளாகி இருக்கும் ஆரியக் கும்பல், பட்டியலின வேஷம் போடுகிறது. காலம் காலமாக போடப்பட்டு வரும் இந்தக் கபடவேடங்களை உண்மைத் தமிழ் மக்கள் உணர்வார்கள். பார்த்துப் பார்த்து பழகிய ஆரியக் கூத்துகளை நிறுத்தி திருந்தப் பார்க்கவும்.**



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (10.11.2023) சென்னை கலைவாணர் அரங்கத்தில், நடைபெற்ற விழாவில், புதிய பயனாளிகளாக தேர்ந்தெடுக்கப்பட்ட 7 இலட்சத்து 35 ஆயிரம் மகளிர் பயன்பெறும் வகையில், மகளிருக்கு மாதந்தோறும் ரூ.1000/– வழங்கிடும் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தை தொடங்கி வைத்து அடையாளமாக 6 மகளிருக்கு வங்கி பற்று அட்டைகளை (ATM Cards) வழங்கினார். இந்நிகழ்ச்சியில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் தயாநிதிமாறன், கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன், சிறப்பு திட்டசெயலாக்கத்துறை செயலாளர் டாக்டர் தாரேஸ் அகமது, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தின் கீழ்

# புதிதாக 7.35 இலட்சம் மகளிருக்கு உரிமைத் தொகை!

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வழங்கி தொடங்கி வைத்தார்!

சென்னை, நவ. 12-

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (10.11.2023) சென்னை, கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்ற விழாவில், மகளிருக்கு மாதந் தோறும் ரூ.1000/ வழங்கிடும் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தில், கள ஆய்வு நிலுவையில் இருந்த விண்ணப் பங்கள் இறுதி செய்யப்பட்டு தேர்ந்தெடுக்கப்பட்ட புதிய பயனாளிகளான 7.35 இலட் சம் மகளிருக்கு உரிமைத் தொகை வழங்கிடும் விதமாக 6 மகளிருக்கு வங்கி பற்று அட் டைகளை (ATM Cards) வழங் கினார்.

**நிதிநிலை அறிக்கையில் திட்டம் பற்றிய அறிவிப்பு!**

தமிழ்நாடு அரசின் 2023-24ஆம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கையில், “மகளி ருக்குச் சொத்துரிமையும், உள்ளாட்சி அமைப்புகளில் தனி இடஒதுக்கீடு அளித்தது முதல், தற்போது கட்டண மில்லாப் பேருந்து பயணம் வழங்கியது வரை, மகளிரின் நலன் காத்து அவர்களது உரி மைகளை நிலைநாட்டுவதில் எப்போதும் அக்கறையுடன் இவ்வரசு செயல்பட்டு வருகி றது.

அந்த வரிசையில் குடும்பத் தலைவிகளுக்கு மாதம் 1,000 ரூபாய் வழங்கப்படும் என்ற தேர்தல் வாக்குறுதியில் அறி வித்தபடி, தகுதிவாய்ந்த குடும்பங்களின் குடும்பத் தலைவிகளுக்கு வரும் நிதி யாண்டில் மாதம் 1,000 ரூபாய் உரிமைத் தொகை யாக வழங்கப்படும். வரலாற் றுச் சிறப்புமிக்க இந்தத் திட் டம் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டான இந்த ஆண்டில், திராவிட இயக்க மாதம் என சொல்லத் தக்க செப்டம்பர் மாதத்தில், தாய் தமிழ்நாட்டின் தலைம கன் பேரறிஞர் பெருமகன் அறிஞர் அண்ணா அவர்க ளின் பிறந்தநாளான செப்டம் பர் மாதம் 15 ஆம் நாள் முத லமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்படும்” என்று அறிவிக்கப்பட்டது.

**சட்டமன்றப் பேரவையில் முதலமைச்சர் விளக்கம்!**

முதலமைச்சர் அவர்கள் 27.3.2023 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், இத்திட்டத்தை செயல்படுத் துவது குறித்து அளித்த விளக் கத்தில், “மகளிர் உரிமைத் தொகைத் திட்டம்” இரண்டு நோக்கங்களைக் கொண்டது. பிரதிபலன் பாராமல் வாழ்நா ளெல்லாம் ஓயாமல் உழைத் துக்கொண்டிருக்கும் பெண்க ளின் உழைப்புக்குக் கொடுக் கும் அங்கீகாரம் முதன்மையா னது. அடுத்து, ஆண்டுக்கு 12 ஆயிரம் ரூபாய் உரிமைத் தொகை என்பது, பெண்க ளின் வாழ்வாதாரத்திற்கு உறு துணையாக இருந்து, வறு மையை ஒழித்து, வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி, சுயமரி யாதையோடு சமூகத்தில் அவர்கள் வாழ்வதற்கு உறுது ணையாக இருக்க வேண்டும் என்பதாகும்.

மகளிரின் சமூகப் பங்க ளிப்பை அங்கீகரிக்கும் வித மாக அறிவிக்கப்பட்டிருக்கும் மாதம் ஆயிரம் ரூபாய் என் பது, குடும்பத் தலைவிக ளுக்கு அவரவர் வங்கிக் கணக் கில் நேரடியாகச் செலுத்தப் படும். இந்த மகத்தான கலை ஞர் மகளிர் உரிமைத் திட்டத் தில் ஏறத்தாழ ஒரு கோடி குடும்பத் தலைவிகளுக்கு, மாதம் ஆயிரம் ரூபாய் வழங் கிடும் வகையில் அமைந்திடும் என்றும் அறிவித்தார்.

சமுதாயத்தில் உள்ள விளிம்புநிலை மக்களாகிய சாலையோரங்களில் குடியி ருப்போர், பழங்குடியினர், தூய்மைப் பணியாளர்கள் மற்றும் இதர ஆதரவற்றோர் இந்தத் திட்டத்தில் பயன் அடைவதை மாவட்ட ஆட்சி யர்கள் உறுதிசெய்ய வேண் டும் என்றும், அவர்களிடம் குடும்ப அட்டை, ஆதார் அட்டை போன்ற தரவுகள் இல்லையென்றாலும் கூட, அவற்றைப் பெறுவதற்கு உரிய வழிவகை செய்து, கலை ஞர் மகளிர் உரிமைத் தொகை அவர்களுக்குக் கிடைப்பதற்கு உதவி புரிய வேண்டும் என் றும், எந்தவொரு தகுதியான பயனாளியும் விடுபட்டுவிடக் கூடாது என்றும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மாவட்ட ஆட்சித் தலைவர் கள் மற்றும் அரசு உயர் அலு வலர்களை அறிவுறுத்தி இருந் தார்.

**தருமபுரியில் முகாமை முதலமைச்சர் தொடங்கி வைத்தார்!**

தருமபுரி மாவட்டம், தொப்பூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டப் பயனாளி களின் விண்ணப்பங்களைப் பதிவு செய்யும் முகாமினை முதலமைச்சர் அவர்கள் 24.7.2023 அன்று தொடங்கி வைத்தார்.

கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தில் இணைந்து கொள்ள 1 கோடியே 63 லட் சம் விண்ணப்பங்கள் அர சிற்கு வந்தது. அவற்றில் தகுதி யுள்ள 1 கோடியே 6 லட்சத்து 50 ஆயிரம் விண்ணப்பங்கள் தேர்வு செய்யப்பட்டது.

**கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தை தொடங்கி வைத்தல்!**

பேரறிஞர் அண்ணா அவர் கள் பிறந்த நாளான 15.9.2023 அன்று காஞ்சிபுரத்தில் தமிழ் நாடு முதலமைச்சர் அவர்கள், 1 கோடியே 6 இலட்சத்து 50 ஆயிரம் மகளிர் பயன்பெறும் வகையில், மாதந்தோறும் ரூ.1000/ வழங்கிடும் தமிழ் நாட்டின் வரலாற்றில் மிகப் பெரிய திட்டமான கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தை தொடங்கி வைத்தார்.

**புதிய பயனாளிகளுக்கு உரிமைத் தொகை வழங்குதல்!**

கலைஞர் உரிமைத் திட் டத்தின் கீழ் முகாம்களில் விண்ணப்பித்து கள ஆய்வு நிலுவையில் உள்ள விண்ணப் பங்கள் இறுதி செய்யப்பட்டு தேர்ந்தெடுக்கப்பட்ட 7.35 இலட்சம் புதிய பயனாளிக ளுக்கு நேற்று முன்தினம் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தின் கீழ் மாதந்தோறும் ரூ.1000/ உரிமைத் தொகை பெறும் வகையில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 6 மக ளிருக்கு வங்கி பற்று அட்டை களை வழங்கினார்.

இத்திட்டத்தின் கீழ் தற் போது புதிதாகக் கண்டறியப் பட்டுள்ள 7.35 இலட்சம் பய னாளிகளுக்கும், ஏற்கனவே, வழங்கப்பட்டு வரும் 1 கோடியே 6 இலட்சத்து 50 ஆயிரம் பயனாளிகளுடன் சேர்த்து திட்டத்தினை விரி வாக்கம் செய்து மொத்தம் 1 கோடியே 13 இலட்சத்து 84 ஆயிரத்து 300 மகளிருக்கு நவம்பர் மாதத்திற்கான உத வித் தொகையினை நேற்று முன்தினம் வழங்கிட முதல மைச்சர் அவர் கள் உத்தரவிட் டுள்ளார்.

இந்நிகழ்ச்சியில், நீர்வளத் துறை அமைச்சர் துரை முரு கன், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், இந்து சமயம் மற் றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, பெருநகர சென்னை மாநக ராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, நாடாளுமன்ற உறுப் பினர்கள் தயாநிதிமாறன், கலாநிதி வீராசாமி, சட்ட மன்ற உறுப்பினர்கள், தலை மைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, வளர்ச்சி ஆணையர் / முதலமைச்சரின் கூடுதல் தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் மரு.ஜெ.ராதாகி ருஷ்ணன், நிதித்துறை முதன் மைச் செயலாளர் த.உதயச்சந் திரன், சிறப்புத் திட்ட செய லாக்கத் துறை செயலாளர் டாக்டர். தாரேஸ் அகமது, கலைஞர் மகளிர் உரிமைத் திட்ட சிறப்புப் பணி அலுவ லர் க.இளம்பகவத், வங்கிக ளின் உயர் அலுவலர்கள், உள் ளாட்சி அமைப்புகளின் பிரதி நிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண் டனர்.

### கோதையாற்றில் வெள்ளப்பெருக்கு

# குமரி குற்றாலம் திற்பரப்பில் 5வது நாளாக குளிக்கத் தடை!

நாகர்கோவில், நவ.12-

குமரி குற்றாலம் என அழைக்கப்படும் திற்பரப்பு அருவியில் தண்ணீர் ஆர்ப்ப ரித்து கொட்டுவதால் 5வது நாளாக குளிக்கத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

கன்னியாகுமரி மாவட் டம் குலசேகரம் பகுதியில் இருந்து 5 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது திற்ப ரப்பு அருவி, மேற்கு தொடர்ச்சி மலையில் இருந்து உற்பத்தியாகி பாய்ந் தோடும் கோதை யாறு, திற்பரப்பு பகுதியில் அருவியாக கொட்டுகிறது.

அருவியின் மேல்பகு தியில் கோதையாற்றின் குறுக்கே தடுப்பணை கட் டப்பட்டு படகு சவாரியும் நடந்து வருகிறது.

பேச்சிப்பாறை உள் ளிட்ட அணைகளில் இருந்து பாசனத்திற்காக திறக்கப்படும் தண்ணீரும் கோதையாற்றில் தான் பாய்ந்து செல்கிறது.

இதனால் மழைக்காலங்க ளில் திற்பரப்பு அருவியில் வெள்ளம் ஆர்ப்பரித்து கொட்டுவது வழக்கம். அந்த நேரங்களில் மட்டும் மக்கள் இந்த அருவியில் குளிக்க அனுமதிக்கப்படு வதில்லை. படகு சவாரியும் ரத்து செய்யப்படுகிறது. இந்த நிலையில் கடந்த சில நாட்களாக மலையோர பகு திகள், குலசேகரத்தை யொட்டிய பகுதிகளில் கனமழை பெய்து வருகிறது. இதனால் கோதையாற்றில் வெள்ளம் கரைபுரண்டு ஓடு கிறது.

இதன் எதிரொலியாக குமரி குற்றாலம் என அழைக்கப்படும் திற்பரப்பு அருவியில் தண்ணீர் ஆர்ப்ப ரித்து கொட்டுகிறது. எனவே கடந்த 4 நாட்க ளாக திற்பரப்பு அருவியில் பொதுமக்கள் குளிக்க அனு மதி மறுக்கப்பட்டிருந்தது.

இதற்கிடையே மழை வெள்ளம் குறையாததால் 5வது நாளாக திற்பரப்பு அருவியில் சுற்றுலா பயணி கள் குளிக்க தடை விதிக்கப் பட்டு உள்ளது.



தமிழ் திரையுலகை புதிய திசை நோக்கி அழைத்துச் சென்ற முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் பராசக்தி திரைப்படத்தின், திரைக்கதை வசனத்தை கலைஞர் நூற்றாண்டை முன்னிட்டு டிஸ்டாக் பதிப்பகத்தார், புதிதாக பதிப்பித்துள்ளனர். அதனை கழக இளைஞர் அணிச் செயலாளர் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று வெளியிட்டு வாழ்த்தினார். அதுபோது எம்.எம்.அப்துல்லா எம்.பி., லக்கி கிருஷ்ணன் ஆகியோர் உடனிருந்தனர்.




தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் துவக்கி வைத்த கலைஞர் மகளிர் உரிமைத் தொகை வங்கி பற்று அட்டைகள் வழங்கும் விழாவின் தொடர்ச்சியாக தருமபுரி மாவட்டம் பெரியாம்பட்டியில் பெண்களுக்கு கலைஞர் மகளிர் உரிமைத் தொகை வங்கி பற்று அட்டைகளை வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சியர் திருமதி.சாந்தி, பென்னாகரம் சட்டமன்ற உறுப்பினர் ஜி.கே.மணி, மேற்கு மாவட்டச் செயலாளர் பி.பழனியப்பன், கிழக்கு மாவட்டச் செயலாளர் தடங்கம். பெ.சுப்ரமணி மற்றும் மாநில, மாவட்ட, ஒன்றிய, பேரூர் கழக செயலாளர்கள் மற்றும் கழகத்தினர் கலந்து கொண்டனர்.

### சென்னை புறநகரில் பலத்த மழை

# புழல் ஏரிக்கு நீர்வரத்து 606 கன அடியாக அதிகரிப்பு!

## செம்பரம்பாக்கம் ஏரி 86 சதவீதம் நிரம்பியது!

திருவள்ளூர், நவ.12-

சென்னைக்கு குடிநீர் வழங்கும் முக்கிய ஏரிகளாக பூண்டி, புழல், செம்பரம்பாக்கம், சோழவரம், கண்ணன்கோட்டை ஏரிகள் உள்ளன. தற்போது வடகிழக்கு பருவமழை தீவிரம் அடைந்து சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் விட்டு விட்டு பலத்த மழை கொட்டி வருகிறது.

நேற்று முன்தினம் இரவு தொடங்கிய மழை விடிய, விடிய நீடித்தது. இதனால் குடிநீர் வழங்கும் ஏரிகளுக்கு நீர் வரத்து அதிகரித்து உள்ளது. புழல் ஏரிக்கு நேற்று முன்தினம் காலை நிலவரப்படி அதிகபட்சமாக 606 கன அடி தண்ணீர் வந்து கொண்டு இருக்கிறது. புழல் ஏரியின் மொத்த கொள்ளளவு 3300 மில்லியன் கன அடி. இதில் இப்போது 2745 மி.கனஅடி தண்ணீர் நிரம்பி காணப்படுகிறது. மொத்தம் உள்ள 21 அடியில் 18.67 அடிக்கு தண்ணீர் உள்ளது. ஏரியில் இருந்து 189 கனஅடி தண்ணீர் வெளியேற்றப்படுகிறது.

செம்பரம்பாக்கம் ஏரியின் மொத்த கொள்ளளவு 3645 மி.கனஅடி ஆகும். இதில் 3141 மி.கனஅடி தண்ணீர் உள்ளது. ஏரி 86 சதவீதம் நிரம்பி உள்ளது. மொத்த உயரமான 24 அடியில் 22.08 அடிக்கு தண்ணீர் உள்ளது. ஏரிக்கு 368 கன அடி தண்ணீர் வந்து கொண்டு இருக்கிறது.160 கனஅடி தண்ணீர் வெளியேற்றப்படுகிறது.

தொடர்ந்து பலத்த மழை பெய்து வருவதால் செம்பரம்பாக்கம், புழல் ஏரிகளில் தண்ணீர் இருப்பை பொதுப்பணித்துறை அதிகாரிகள் தொடர்ந்து கண்காணித்து வருகின்றனர்.

பூண்டி ஏரியில் அதன் மொத்த கொள்ளளவான 3231 மி.கனஅடியில் 1860 மி.கன அடி தண்ணீர் உள்ளது. 80 கனஅடி தண்ணீர் வந்து கொண்டு இருக்கிறது. 68 கனஅடி நீர் வெளியேற்றப்படுகிறது. சோழவரம் ஏரியில் மொத்த கொள்ளளவான 1081 மி.கனஅடியில் 627 மி.கனஅடி தண்ணீர் இருப்பு உள்ளது. ஏரிக்கு 26 கனஅடிதண்ணீர் வருகிறது. கண்ணன்கோட்டை தேர்வாய் கண்டிகை ஏரியில் மொத்த கொள்ளளவான 500 மி.கனஅடியில் 435 மி.கனஅடி தண்ணீர் நிரம்பி உள்ளது. ஏரிக்கு 10 கனஅடி தண்ணீர் வருகிறது.

தொடர்ந்து மழை பெய்யும் என்று அறிவிக்கப்பட்டு உள்ளதால் வரும் நாட்களில் குடிநீர் ஏரிகளுக்கு நீர் வரத்து மேலும் அதிகரிக்கும் என்று எதிர் பார்க்கப்படுகிறது.

### அமெரிக்க டாலருக்கு எதிரான

## இந்திய ரூபாயின் மதிப்பு ரூ.83.34 ஆக சரிவு!

சென்னை, நவ.12-

ஃபெடரல் ரிசர்வ் தலைவர் ஜெரோம் பவல் கடுமையான கருத்துக்கள் மற்றும் இந்திய ரிசர்வ் வங்கியின் ஆதரவை விலக்கிக் கொண்டதைத் தொடர்ந்து அமெரிக்க டாலருக்கு எதிரான இந்திய ரூபாயின் மதிப்பு வரலாறு காணாத வீழ்ச்சியில் முடிந்தது.

அமெரிக்க டாலருக்கு எதிரான இந்திய ரூபாயின் மதிப்பு 5 காசுகள் சரிந்து ரூ.83.34ஆக இருந்தது. ப்ளூம்பெர்க் தரவுகளின் படி, இது (வியாழக்கிழமை) ரூ.83.29ஆக முடிவடைந்தது.

இன்ட்ராடேயில், இது 21 பைசா குறைந்து, அமெரிக்க டாலருக்கு எதிராக இதுவரை இல்லாத அளவு ரூ.83.50ஐ எட்டியது. செப்டம்பர் 5ஆம் தேதி 35 பைசா சரிந்ததிலிருந்து ஒரே நாளில் ஏற்பட்ட மிகக் கடுமையான சரிவு இதுவேயாகும்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (10.11.2023) முகாம் அலுவலகத்தில், நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.ராசா சந்தித்து, தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகத் தொழிலாளர்களுக்கு (TANTEA) 20 சதவீதம் போனஸ் மற்றும் தினமும் வழங்கப்படும் ஊதியத்தை 438 ரூபாயாக உயர்த்தி வழங்கிட உத்தரவிட்டமைக்காகவும் நன்றி தெரிவித்து, தான் எழுதிய "பெரியார் அம்பேத்கர் – இன்றைய பொருத்தப்பாடு" என்ற புத்தகத்தை வழங்கி வாழ்த்துப் பெற்றார்.

### கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகளில் பணி புரியும்

# தொழிலாளர்கள் - பணியாளர்களுக்கு மிகை ஊதியம் - கருணைத் தொகை!

## தமிழ்நாடு அரசு அறிவிப்பு!

சென்னை, நவ. 12 -

வேளாண்மை உழவர் நலத்துறை கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகளில் பணிபுரியும் தொழிலாளர் மற்றும் பணியாளர்களுக்கு 2022-2023 ஆம் ஆண்டிற்கான மிகை ஊதியம் மற்றும் கருணை தொகை வழங்குதல் தொடர்பான செய்தி வருமாறு:

தமிழ்நாட்டில் 16 கூட்டுறவு மற்றும் 2 பொதுத்துறை சர்க்கரை ஆலைகள் உள்ளன. கரும்பு விவசாயிகளின் நலனை பாதுகாக்கவும், சாகுபடி பரப்பை அதிகரிக்கவும், சர்க்கரை ஆலைகளின் செயல்திறனை அதிகரிக்கவும், இவ்வரசு பல்வேறு ஆக்கப்பூர்வமான பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. இதன் ஒரு பகுதியாக ஒவ்வொரு பருவத்திற்கும் கரும்பு விவசாயிகளுக்கு ஒன்றிய அரசு நிர்ணயம் செய்யும் கரும்பு விலைக்கு மேல் கூடுதலாக சிறப்பு ஊக்கத்தொகை வழங்கி வருகிறது. அதனடிப்படையில் கரும்பு விவசாயிகள் நலனில் அக்கறை கொண்ட தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 2022-23 அரவைப் பருவத்திற்கு கூட்டுறவு, பொதுத்துறை மற்றும் தனியார் துறை சர்க்கரை ஆலைகளுக்கு கரும்பு வழங்கிய தகுதிவாய்ந்த விவசாயிகளுக்கு டன் ஒன்றுக்கு ரூ.195/ விகிதம் வழங்குவதற்கு ஏதுவாக மொத்தம் ரூ.253.70 கோடி நிதி ஒதுக்கீடு செய்து ஆணையிட்டுள்ளார்கள். இவ்வாறு அரசு எடுத்த பல்வேறு நடவடிக்கைகளின் காரணமாக கரும்பு சாகுபடி பரப்பு கணிசமாக அதிகரித்ததுடன் சர்க்கரை ஆலைகளின் செயல்திறனும் உயர்ந்து வருகிறது.

மேலும் கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகளில் பணிபுரிந்து வரும் தொழிலாளர்கள் மற்றும் பணியாளர்கள் அனைவரும் எதிர்வரும் தீபாவளி பண்டிகையை மகிழ்ச்சியுடன் கொண்டாடும் வகையில் முதலமைச்சர் அவர்கள் 2022-2023 ஆம் ஆண்டிற்கான மிகை ஊதியம் மற்றும் கருணை தொகை வழங்க ஆணையிட்டுள்ளார்கள். அதன் அடிப்படையில் ஒதுக்கீட்டு உபரி உள்ள சுப்ரமணிய சிவா மற்றும் கள்ளக்குறிச்சி - II ஆகிய இரு கூட்டுறவு சர்க்கரை ஆலைகளுக்கும் மிகை ஊதியமாக 8.33% மற்றும் கருணை தொகையாக 11.67% என மொத்தம் 20% போனஸ் வழங்கவும், மீதமுள்ள 14 கூட்டுறவு மற்றும் 2 பொதுத்துறை சர்க்கரை ஆலைகளுக்கு மிகை ஊதியமாக 8.33% மற்றும் கருணை தொகையாக 1.67% என மொத்தம் 10% போனஸ் வழங்கவும் ஆணையிட்டுள்ளார்கள்.

இதன் மூலம் தமிழ்நாட்டில் உள்ள 16 கூட்டுறவு மற்றும் 2 பொதுத்துறை சர்க்கரை ஆலைகளில் பணிபுரியும் சுமார் 6103 தொழிலாளர்கள் மற்றும் பணியாளர்களுக்கு 2022-2023 ஆம் ஆண்டிற்கான மிகை ஊதியம் மற்றும் கருணை தொகை வழங்க ரூ.415.30 இலட்சங்கள் செலவினம் ஏற்படும்.

இதன் மூலம் அனைத்து கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகளில் பணிபுரியும் தொழிலாளர்கள் மற்றும் பணியாளர்கள் எதிர்வரும் காலங்களில் சிறப்பாக பணிபுரிந்து கரும்பு விவசாயிகள் மற்றும் சர்க்கரை ஆலைகளின் வளர்ச்சிக்கு உதவும் சூழ்நிலை உருவாகும்.

இவ்வாறு வேளாண்மை உழவர் நலத்துறை செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### தீண்டாமையை ஒழிக்கப் பாடுபட்ட பெரியார், காமராஜரை இழிவுபடுத்தும்

# அண்ணாமலையை தமிழ்ச் சமுதாயம் மன்னிக்காது!

## தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் கே.எஸ்.அழகிரி எச்சரிக்கை!

சென்னை, நவ.12 -

தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் கே.எஸ்.அழகிரி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

தமிழக பா.ஜ.க. தலைவர் அண்ணாமலை கட்சியை வளர்ப்பதற்காக பல கட்டங்களாக விட்டுவிட்டு பாத யாத்திரை மேற்கொண்டு வருகிறார். பெரும் பணத்தை செலவு செய்து கட்சியினரை திரட்டி, குறிப்பிட்ட நகர வீதிகளில் அந்தப் பாத யாத்திரை நடைபெற்று வருகிறது. இதில் உரையாற்றுகிற அண்ணாமலை, ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர் என்கிற மமதையில் காழ்ப்புணர்ச்சியோடு சர்ச்சைக்குரிய விஷமத்தனமான கருத்துகளை கூறி வருகிறார். தமிழகத்தின் வளர்ச்சிக்காகப் பாடுபட்ட தந்தை பெரியார், காமராஜர், கலைஞர் ஆகியோர் குறித்து மிக மிக இழிவான ஆட்சேபனைக்குரிய கருத்துகளை வெளிப்படுத்துகிறார்.

இவரைப் போல இழிவாக கருத்துக் கூறியவர்கள் கடந்த காலங்களில் வரலாற்றிலிருந்து துடைத்தெறியப்பட்டது திடீர் அரசியல்வாதியான அண்ணாமலை அறிந்திருக்க வாய்ப்பில்லை. அண்ணாமலையை பொறுத்தவரை ஆட்டைக் கடித்து, மாட்டை கடித்து தற்போது மனிதனை கடிக்க வந்திருக்கிறார்.



தமிழகத்தில் ஈராயிரம் ஆண்டுகளாக ஊறிப் போன சமூக அடக்குமுறைகளை, அநீதிகளை, சாதிய ஏற்றத் தாழ்வுகளை, தீண்டாமை கொடுமைகளை துடைத்தெறிவதற்காக தமது வாழ்நாள் முழுவதையும் அர்ப்பணித்துக் கொண்டு தமிழ்ச் சமுதாயத்தின் முன்னேற்றத்திற்காக பாடுபட்ட அற்புதமான தலைவர் தந்தை பெரியார். கடவுள் மறுப்பு கொள்கையை பகுத்தறிவின் அடிப்படையில் மூடநம்பிக்கைகளுக்கு எதிராக தந்தை பெரியார் பரப்புரை மேற்கொண்டு வந்தார். இதில் மாற்றுக்கருத்து கூறுவதற்கு அனைவருக்கும் உரிமை உண்டு.

**அநாகரிகப் பேச்சு!**

ஆனால் அண்ணாமலையைப் போல நாகரீகமற்ற முறையில் பெரியாரை விமர்சனம் செய்தது கிடையாது. ஸ்ரீரங்கம் கோயிலுக்கு முன்புள்ள பெரியார் சிலையை அகற்றுவது தான் நோக்கம் என்று கூறுகிறார். நாடாளுமன்ற மைய மண்டபத்தில் மகாத்மா காந்தி படுகொலையில் குற்றவாளியான சாவர்க்கர் படத்தை பா.ஜ.க. திறந்து வைத்ததற்கு கடுமையான விமர்சனம் எழுந்தது. ஆனால், அந்தப் படத்தை அகற்ற வேண்டுமென்று கோரி எவரும் போராட்டம் நடத்த முன்வரவில்லை.

காந்தியடிகளை கொன்ற கோட்சேவை தியாகி என்று பிரக்யாசிங் தாகூர் கூறியதற்காக பா.ஜ. அவர் மீது நடவடிக்கை எடுத்ததா? இந்திய விடுதலையைப் பெற்றுத் தந்த மகாத்மா காந்தியை இழிவுபடுத்துகிற பா.ஜ.க.வுக்கு என்ன தண்டனை கொடுப்பது ? இதற்கெல்லாம் அண்ணாமலை விளக்கம் கூறுவாரா? சமூக நீதியை பாதுகாத்த பெரியாரையும், காமராஜரையும் இழிவுபடுத்துகிற அண்ணாமலையை தமிழ்ச் சமுதாயம் என்றைக்கும் மன்னிக்காது.

இத்தகைய அருவெறுக்கத்தக்க அநாகரீக பேச்சுகளினால் பா.ஜ. குழிதோண்டி புதைக்கப்படுவது உறுதி. தமிழக அரசியல் வரலாற்றில் இவர்களது பங்களிப்பை வரலாற்று நூல்கள் மூலம் அறிந்து கொண்டு பேசுவது நல்லது.

இத்தகைய பேச்சுகளினால் கடுமையாக பாதிக்கப்படப்போவது அண்ணாமலை அல்ல. மாறாக, வரும் 2024 நாடாளுமன்றத் தேர்தலில் 39 தொகுதிகளிலும் டெபாசிட் இழக்கவே அண்ணாமலையின் பேச்சுகள் உதவப் போகிறது. எனவே, தமிழக மக்களின் கோபத்திற்கும், வெறுப்புக்கும் அண்ணாமலை ஆளாவதை எவராலும் தடுக்க முடியாது.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

### பண்டிகை தினத்தை முன்னிட்டு

# ஒரே நாளில் 3.50 லட்சம் பேர் சொந்த ஊர்களுக்குப் பயணம்!

## பேருந்து – ரெயில்களில் அலைமோதும் கூட்டம்!

சென்னை, நவ.12-

இன்று (12-ந் தேதி) தீபாவளி பண்டிகை கொண்டாடப்படவுள்ளது. இதற்காக பொதுமக்கள் சிரமமின்றி சொந்த ஊர்களுக்கு பயணமாகும் வகையில் தமிழக அரசு போக்குவரத்துக் கழகங்கள் சார்பில் சிறப்பு பஸ்கள் இயக்கப்படுகின்றன.

அதன்படி நேற்று முன்தினம் முதல் சிறப்பு பஸ்கள் இயங்கத் தொடங்கின. சென்னையை பொறுத்தவரை பிற்பகல் முதலே போக்குவரத்து நெரிசல் காணப்பட்டது.

இதற்கு அவ்வப்போது பெய்து வரும் மழையும் காரணமாக இருந்தது. அதே நேரம், மாதவரம் பஸ் நிலையம், கே.கே.நகர் பஸ் நிலையம், தாம்பரம் மெப்ஸ் பஸ் நிலையம், தாம்பரம் ரெயில் நிலைய பஸ் நிறுத்தம், பூவிருந்த வல்லி பைபாஸ் (மாநகர போக்குவரத்துக் கழக பணிமனை), கோயம்பேடு பஸ் நிலையம் ஆகிய இடங்களில் இருந்து பஸ்கள் இயக்கப்படுகின்றன. இது தொடர்பாக பயணிகளுக்கு தெரிவிக்கப்பட்டதையடுத்து, அவரவர் செல்லும் ஊர்களுக்கு ஏற்ப பஸ் நிலையங்களுக்குச் சென்று பயணத்தைத் தொடர்ந்தனர்.

இந்த பஸ்நிலையங்களை இணைக்கும் வகையில் கோயம்பேட்டில் இருந்து மாநகர பஸ்கள் இயக்கப்பட்டன. கோயம்பேடு பஸ் நிலையத்தில் தென் மாவட்டம் உள்ளிட்ட சில ஊர்களுக்குச் செல்லும் பயணிகள் மட்டுமே வருகை தந்தனர்.

ஆம்னி பஸ்களைப் பொறுத்தவரை, கோயம்பேடு மற்றும் கிளாம்பாக்கம் தற்காலிக பஸ் நிலையங்கள் வாயிலாக பயணிகளை ஏற்றிச்செல்ல ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்கும் வகையில் கார் மற்றும் இதர வாகனங்களில் செல்வோர், தாம்பரம், பெருங்களத்தூர் வழியாக செல்வதைத் தவிர்த்து திருப்போரூர் செங்கல்பட்டு அல்லது வண்டலூர் வெளிவட்டச்சாலை வழியாக செல்லுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டிருந்தனர்.

பஸ் இயக்கம் தொடர்பாக போக்குவரத்துத் துறை அதிகாரிகள் கூறியதாவது:

சென்னையில் இருந்து வழக்கமாக இயக்கப்படும் 2,100 பஸ்களுடன் 643 சிறப்பு பஸ்கள் இயக்கப்பட்டன. மொத்தம் 2,734 பஸ்களில் 1 லட்சத்து 36 ஆயிரம் பயணிகள் பயணம் செய்தனர்.

அதே நேரம், சென்னையில் இருந்து பயணிக்க 19,858 பேர் முன்பதிவு செய்திருந்தனர். அரசு விரைவுப் போக்குவரத்துக் கழக பஸ்களில் அனைத்து இருக்கைகளும் பூர்த்தியான பஸ்கள் மட்டும் கோயம்பேட்டில் இருந்து புறப்பட்டு பூவிருந்தவல்லி, நசரத்பேட்டை, வெளிவட்டச்சாலை வழியாக வண்டலூர் சென்றடையும் வகையில் இயக்கப்பட்டன.

இந்த பஸ்களில் தாம்பரம் மற்றும் பெருங்களத்தூரில் இருந்து பயணம் மேற்கொள்ள முன்பதிவு செய்த பயணிகள் கிளாம்பாக்கம் தற்காலிக பஸ் நிறுத்தத்தில் ஏறிக்கொள்ள வழிவகை செய்யப்பட்டிருந்தது. தமிழக அரசு போக்குவரத்துக் கழக பஸ்களின் இயக்கம் குறித்து அறிந்து கொள்வதற்கும் மற்றும் இயக்கம் குறித்து புகார் தெரிவிப்பதற்கும் 94450 14450, 94450 14436 ஆகிய தொலைபேசி எண்களை 24 மணி நேரமும் தொடர்புகொள்ளலாம்.

ஆம்னி பஸ்களில் அதிக கட்டணம் வசூல் செய்தல் உள்ளிட்ட புகார்களுக்கு 1800 425 6151 மற்றும் 044 2474 9002, 044 2628 0445, 044 2628 1611 ஆகிய எண்களைத் தொடர்பு கொள்ளலாம் என்றனர்.

அரசு போக்குவரத்துக் கழக பஸ் இயக்கம் தொடர்பாக பொதுமக்கள் தங்களின் குறைகள் மற்றும் புகார்களை தெரிவிக்க 1800 599 1500 என்ற கட்டணமில்லா உதவி எண் கடந்த மார்ச் மாதம் அறிமுகம் செய்யப்பட்டது.

இதை எளிதில் நினைவில் வைத்து கொள்ள இயலவில்லை என்று பெறப்பட்ட கோரிக்கையின் அடிப்படையில், 149 எனும் புதிய உதவி எண் மூலமாக மக்கள் மற்றும் பயணிகள் தங்களது குறைகள் மற்றும் புகார்களை தெரிவிக்கலாம் என போக்குவரத்துத் துறை தெரிவித்துள்ளது.

இதேபோல சென்னையில் இருந்து 1,320 ஆம்னி பஸ்கள் இயக்கப்பட்டன. இதில் 51 ஆயிரம் பேர் பயணம் செய்துள்ளனர். நேற்று முன்தினம் 1,680 பஸ்கள் இயக்கப்பட்டது. அதில் 67 ஆயிரம் பேர் பயணம் செய்துள்ளனர்.

மேலும் சென்ட்ரல், எழும்பூர் ரெயில் நிலையங்களில் இயக்கப்பட்ட வழக்கமான ரெயில்கள் மற்றும் சிறப்பு ரெயில்கள் மூலம் 1.50 லட்சம் பேர் பயணம் செய்துள்ளனர்.

அரசு பஸ்கள், ஆம்னி பஸ்கள் மற்றும் ரெயில்களில் நேற்று ஒரே நாளில் சுமார் 3.50 லட்சம் பேர் வரை பயணம் செய்துள்ளதாக கணக்கிடப்பட்டுள்ளது.

### தண்டவாளத்தில் மரம் முறிந்து விழுந்து

# ரயில் போக்குவரத்து பாதிப்பு!

நாகர்கோவில், நவ.12-

கன்னியாகுமரி மாவட்டத்தில் தொடர்ந்து பெய்து வரும் கன மழையால் மண் சரிவு ஏற்பட்டு அவ்வப்போது ரயில் போக்குவரத்து பாதிக்கப்படுகிறது. இந்தநிலையில் நேற்று முன்தினம் இரவு நாகர்கோவில் திருவனந்தபுரம் ரயில் பாதையில் குழித்துறை அருகே தண்டவாளத்தையொட்டி இருந்த மரம் முறிந்து விழுந்து, உயரழுத்த மின் கம்பிகள் அறுந்து தண்டவாளத்தில் விழுந்தன.


இதனால் ரயில் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. இதே போல் நேற்று முன்தினம் இரவு பெய்த மழையால் பள்ளியாடி அருகே தண்டவாளம் அருகே மண் சரிவும் ஏற்பட்டது. இந்த சம்பவங்கள் குறித்து அறிந்ததும் உடனடியாக மீட்புக் குழுவினர் விரைந்தனர். இந்த சம்பவம் நடந்த போது சென்னையில் இருந்து குரு வாயூர் செல்லக் கூடிய குருவாயூர் எக்ஸ்பிரஸ் நாகர்கோவிலில் இருந்து புறப்பட தயார் நிலையில் இருந்தது.

இந்த தகவல் அறிந்ததும் உடனடியாக குருவாயூர் எக்ஸ்பிரஸ் நிறுத்தப்பட்டது. இந்த சம்பவத்தின் காரணமாக மங்களூர் எரநாடு எக்ஸ்பிரஸ் ரயில் திருவனந்தபுரம் நாகர்கோவில் இடையே நேற்று முன்தினம் இரவு திடீரென ரத்து செய்யப்பட்டது. மீட்புக் குழுவினர் சுமார் 4 மணி நேரத்துக்கு மேல் போராடி அறுந்து விழுந்த உயரழுத்த மின் பாதைகளை சரி செய்தனர். இதையடுத்து குருவாயூர் எக்ஸ்பிரஸ் புறப்பட்டு சென்றது. காலையில் இருந்து வழக்கம் போல் ரயில் போக்குவரத்து தொடங்கியது.

## விடுமுறை அறிவிப்பு

இன்று (12.11.2023 - ஞாயிற்றுக்கிழமை) முரசொலி அலுவலகத்திற்கு விடுமுறை. முரசொலியின் அடுத்த இதழ் நாளை மறுநாள் (14.11.2023 - செவ்வாய்க் கிழமை) வழக்கம் போல் வெளிவரும்.

**தலைமை நிர்வாகி**
**முரசொலி**





முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சென்னை கலைவாணர் அரங்கத்தில் நேற்று முன்தினம் (10.11.2023) நடைபெற்ற விழாவில் கலைஞர் மகளிர் உரிமைத் திட்ட பயனாளிகளுக்கு வங்கி பற்று அட்டைகளை வழங்கினார்கள். அதனைத் தொடர்ந்து, நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு திருச்சிராப்பள்ளி கலையரங்கத்தில் நடைபெற்ற விழா நிகழ்வில், கலைஞர் மகளிர் உரிமைத் திட்ட பயனாளிகளுக்கு வங்கி பற்று அட்டைகளை வழங்கினார்கள். இந்நிகழ்வில் மாவட்ட ஆட்சித் தலைவர் மா.பிரதீப் குமார், நகராட்சி மேயர் மு.அன்பழகன், மாநகராட்சி ஆணையர் இரா.வைத்திநாதன், மத்திய மாவட்டச் செயலாளர் வைரமணி, மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.இரா.அபிராமி, சட்டமன்ற உறுப்பினர்கள் அ.சௌந்தரபாண்டியன், செ.ஸ்டாலின் குமார், ந.தியாகராஜன், எம்.பழனியாண்டி, சீ.கதிரவன், மாவட்ட ஊராட்சித் தலைவர் த.ராஜேந்திரன், மண்டலத் தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள், அரசு அலுவலர்கள், கலைஞர் மகளிர் உரிமைத் திட்ட பயனாளிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# ஆளுநர் ரவி - ஒன்றிய அரசுக்கு உச்சநீதிமன்றம் நோட்டீஸ்!

... முதல் பக்கத் தொடர்ச்சி

ஆளுநர் செயல்படுகிறார் என்றும் மனுவில் தமிழ்நாடு அரசு தெரிவித்துள்ளது. நீண்டகாலம் சிறையில் இருக்கும் இஸ்லாமியர்கள் உள்ளிட்ட 49 கைதிகளை விடுதலை செய்வதற்கான பரிந்துரையையும் ஆளுநர் கிடப்பில் போட்டுள்ளதாகவும், எனவே, சட்டப்பேரவையில் நிறைவேற்றி அனுப்பப்படும் மசோதாக்களுக்கு ஒப்புதல் அளிக்க ஆளுநருக்கு காலக்கெடு விதிக்க வேண்டும் என்று தமிழ்நாடு அரசு சார்பில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இந்த வழக்கு உச்சநீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்துள்ள நிலையில், தமிழ்நாடு அரசு சார்பில் மூத்த வழக்கறிஞர்கள் அபிஷேக் சிங்வி, வில்சன் ஆகியோர் ஆஜராகி வாதிட்டனர்.

வழக்கு விசாரணையின்போது கருத்து தெரிவித்த உச்சநீதிமன்ற நீதிபதிகள், ஆளுநர் ஆர்.என்.ரவியின் செயல்பாடு மிகவும் கவலையளிக்கிறது என்று தெரிவித்தனர். தமிழ்நாடு அரசு தொடர்ந்த வழக்கில் ஆளுநர் மற்றும் ஒன்றிய உள்துறை அமைச்சகத்துக்கு நோட்டீஸ் அனுப்பவும், ஒன்றிய அரசு தரப்பில் அட்டர்னி ஜெனரல் ஆஜராகவும் உத்தரவிட்டனர்.

சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்ட மசோதாக்களை ஆளுநர் கிடப்பில் போட முடியாது என்றும், அரசியலமைப்புச் சட்டப்படி மசோதாக்களுக்கு ஆளுநர் ஒப்புதல் அளிக்க வேண்டும் அல்லது திரும்பி அனுப்ப வேண்டும் அல்லது குடியரசுத் தலைவருக்கு அனுப்ப வேண்டும் என்றும், ஆளுநருக்கு எதிராக தமிழ்நாடு அரசு முன்வைத்துள்ள குற்றச்சாட்டு மிக முக்கியமானவை என்றும் உச்சநீதிமன்ற நீதிபதிகள் கருத்து தெரிவித்தனர்.

### இரண்டாம் கட்டமாக

# திண்டிவனத்தில் - கலைஞர் மகளிர் உரிமைத்தொகை வழங்கும் திட்டம்!

## அமைச்சர் செஞ்சி மஸ்தான் தொடங்கி வைத்தார்!

*திண்டிவனம், நவ.12-*

விழுப்புரம் மாவட்டம் திண்டிவனத்தில் மேல் முறையீடு செய்யப்பட்ட கலைஞர் மகளிர் உரிமைத் தொகை வழங்கும் திட்டத்தை அமைச்சர் செஞ்சி. மஸ்தான் தொடங்கி வைத்தார்.

தமிழகத்தில் தி.மு.க. தலைமையிலான அரசு பொறுப்பு ஏற்றதிலிருந்து பல்வேறு நலத்திட்ட உதவிகள் மற்றும் உன்னதமான பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகின்றனர்.

குறிப்பாக அனைத்து மகளிர் மத்தியிலும் வரவேற்பு பெற்ற கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டம் செயல்படுத்தப்பட்டு, மாதம் 1000 ரூபாய் குடும்பத் தலைவிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது. மேலும் விண்ணப்பம் வழங்கிய பலருக்கு உரிமை தொகை வ2-ங்காததால், கடந்த 24ஆம் தேதி இ -சேவை வாயிலாக மேல்முறையீடு செய்ய அரசு அனுமதி வழங்கியது. இதனால் மேல் முறையீடு செய்யப்பட்ட மற்றும் பரிசீலனையில் இருந்த குடும்பத் தலைவிகளுக்கு நேற்று முன்தினம் சென்னை கலைவாணர் அரங்கில் தமிழக முதலமைச்சர் இரண்டாவது கட்டமாக மகளிர் உரிமைத் தொகை பெறுவதற்கு வங்கிப் பற்று அட்டை வழங்கி நிகழ்ச்சியை தொடங்கி வைத்தார்.

இதனைத் தொடர்ந்து விழுப்புரம் மாவட்டம் திண்டிவனத்தில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் திண்டிவனம், மரக்காணம் ஆகிய வட்டங்களுக்கு உட்பட்ட 5325 குடும்பத் தலைவிகளுக்கு,6 கோடியே 39 லட்சம் ரூபாய் மகளிர் உரிமை பெறுவதற்கு வங்கி 10 அட்டை வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு விழுப்புரம் மாவட்ட தேசிய நெடுஞ்சாலை நில எடுப்பு தனி மாவட்ட வருவாய் அலுவலர் சரஸ்வதி தலைமை தாங்கினார். விழுப்புரம் மாவட்ட தாட்கோ மேலாளரும் திண்டிவனம் சார் ஆட்சியர் பொறுப்பு தமிழரசன்அனைவரையும் வரவேற்றார்.

நிகழ்ச்சியில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் கலந்து கொண்டு குடும்பத் தலைவிகளுக்குகலைஞர் மகளிர் உரிமைத்தொகை பெறுவதற்கு வங்கிப் பற்று அட்டையை வழங்கி சிறப்புரையாற்றி னார்.

நிகழ்ச்சியில் பேசிய அமைச்சர் செஞ்சிமஸ்தான் குறிப்பிட்டதாவது:-

மக்கள் நலன் சார்ந்த பல்வேறு திட்டங்களை முதலமைச்சர் செயல்படுத்தி வருகிறார்.

அந்த வகையில் தாய் உள்ளத்தோடு பெண்கள் நலனில் அக்கறை உள்ள முதலமைச்சரை நாம் பெற்று இருப்பதால் தான் இந்தியாவிற்கே எடுத்துக்காட்டான கலைஞர் மகளிர் உரிமை திட்டம் அறிவித்துச் செயல்படுத்தி உள்ளார்.

ஒரு திட்டம் என்று அறிவிக்கப்பட்டால் அதில் ஆயிரக்கணக்கான பேர் பயன் அடைவார்கள் ஒட்டு மொத்த தமிழகத்தில் உள்ள விவசாயிகளுக்கு இலவச மின்சாரத்தை கலைஞர் அவர்கள் வழங்கினார்.லட்சக்கணக்கான விவசாயிகள் பயன் அடைந்தனர்.

அவர் வழியில் ஆட்சி செய்யும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கலைஞர் பெயரில் மகளிர் உரிமைத் தொகை திட்டம் அறிவிப்பால் ஒரு கோடியை கடந்து பலன் பெறுகின்ற இத்திட்டம் இந்தியாவிற்கே ஒரு எடுத்துக்காட்டான திட்டமாகவும், மகளிர்களுக்கு உதவுகின்ற, உரிமைகளை பெறுகின்ற திட்டமாக உள்ளது.

இவ்வாறு அமைச்சர் செஞ்சி மஸ்தான் பெருமிதம் பொங்க தெரிவித்தார்.

இதில் மயிலம் சட்ட மன்ற உறுப்பினர் சிவக்குமார், மாவட்ட ஊராட்சிக் குழு துணைத் தலைவர் ஷீலாதேவி சேரன், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அலுவலர் முகுந்தன், நகரமன்ற தலைவர் நிர்மலா ரவிச்சந்திரன், ஒன்றிய பெருந்தலைவர்கள் ஒலக்கூர் சொக்கலிங்கம்,மயிலம் யோகேஸ்வரி மணிமாறன், மரக்காணம் தயாளன், துணைத் தலைவர்கள் ஒலக்கூர் ராஜாராம்,மரக்காணம் பழனி, வட்டாட்சியர் மரக்காணம் பாலமுருகன், நகராட்சி ஆணையர் தமிழ்ச்செல்வி, தலைமையிடத்து துணை வட்டாட்சியர் வேலு, மண்டல துணை வட்டாட்சியர்கள் ராதாகிருஷ்ணன், அக்தர் ஜஹான், மாவட்ட அவைத்தலைவர் டாக்டர் சேகர் பொருளாளர் வழக்கறிஞர் ரமணன், நகர செயலாளர் கண்ணன், நகர துணை செயலாளர்கள் ஓவியர் கௌதமன், ரேணுகா, நகரமன்ற துணைத் தலைவர் ராஜலக்ஷ்மி வெற்றிவேல்,ஒன்றிய செயலாளர்கள் ரவிச்சந்திரன், மணிமாறன், மாவட்ட கவுன்சிலர் விஜயன், நகர கவுன்சிலர்கள் பாஸ்கர், ஷபியுல்லா, ரம்யா மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள், மகளிர் உரிமைத் தொகை பெற்ற பயனாளிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

திண்டிவனம் வட்டாட்சியர் சிவா நன்றி கூறினார்.

### மானாமதுரையில்

# ரூ.10 லட்சம் செலவில் வடிகால் சீரமைப்புப் பணிகள்!

## நகர் மன்றத் தலைவர் பார்வையிட்டார்

*சிவகங்கை, நவ. 12-*

சிவகங்கை மாவட்டத்தில் மானாமதுரை நகராட்சி உள்ளது. இதில் 27வார்டுகள் உள்ளன. கடந்த சில தினங்களாக மானாமதுரை மற்றும் சுற்றுப்புற கிராமங்களில் தொடர்ந்து மழைபெய்து வருகிறது. இதனால் மானாமதுரை நகரில் தண்ணீர் தேங்காமல் கண்மாய்களுக்கு செல்வதற்காக நகராட்சி பொது நிதியிலிருந்து ரூபாய் 10லட்சத்தினை வடிகால் சீரமைப்பிற்காக ஒதுக்கீடு செய்யப்பட் டுள்ளது. இந்த பொது நிதியில் இருந்து 27வார்டுகளிலும் உள்ள வடிகால்கள் நகராட்சி பணியாளர்கள் மற்றும் ஜேசிபி எந்திரங்கள் மூலமாக சீரமைப்பு பணிகள் நடைபெற்று வருகிறது.

அந்த பணிகளை நகர் மன்ற தலைவர் எஸ்.மாரியப்பன்கென்னடி, பார்வையிட்டார்.

அவருடன் துணைத் தலைவர் பாலசுந்தரம் , கவுன்சிலர் புருசோத்தமன், ஆணையாளர் ரங்கநாயகி, பொறியாளர் முத்துக்குமார், நகரச் செயலாளர் க.பொன்னுச் சாமி உட்பட அலுவலர்கள் சென்றிருந்தார்கள். வடிகால் சீரமைப்பு பணிகளை விரைவில் முடித்திடு மாறு அலுவலர்களிடம் அவர் கூறினார்.



விழுப்புரம் மாவட்டம் திண்டிவனத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கலைஞர் மகளிர் உரிமைத்தொகை திட்டத்தில் இரண்டாம் கட்டமாக தேர்வு செய்யப்பட்ட குடும்பத் தலைவிகளுக்கு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத் துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் வங்கி பற்று அட்டையை வழங்கினார். உடன் மயிலம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் சிவகுமார், தனி மாவட்ட வருவாய் அலுவலர் சரஸ்வதி, சார் ஆட்சியர் பொறுப்பு தமிழரசன், ஒன்றிய பெருந்தலைவர்கள் சொக்கலிங்கம், தயாளன், யோகேஸ்வரி மணிமாறன், நகர மன்றத் தலைவர் நிர்மலா ரவிச்சந்திரன் ஆகியோர் உள்ளனர்.

# திட்ட இமாலய வெற்றிக்கு உழைத்தவர்களுக்குப் பாராட்டு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை ... முதல் பக்கத் தொடர்ச்சி

மகளிருக்கும் போய்ச் சேரவேண்டும் என்பதில் நம்முடைய அரசு மிகவும் கவனமாக இருந்தது.

வி.ஏ.ஓ அலுவலகம், தாலுகா அலுவலகம் என்று எங்கேயும் செல்லாமல் அலைச்சலில்லாமல், பொது மக்களுக்கு எந்தச் சிரமமும் இல்லாமல் இருக்கவேண்டும் என்று அரசே உங்களிடம் வந்து விண்ணப்பங்களை வாங்க எப்படி வாங்கினார்களோ அதேபோல, அந்த விண்ணப்பங்களை வாங்குகின்ற முகாம்களை அமைக்கச் சொன்னேன். கடந்த ஜூலை 24ஆம் தேதி, தருமபுரி மாவட்டம் தொப்பூரில் அந்த முகாமை, நானே நேரில் சென்று தொடங்கி வைத்தேன். ஏறக்குறைய ஒரு கோடியே 63 இலட்சம் மகளிர் விண்ணப்பித்தார்கள். இதற்கும் சிலர் விமர்சனம் செய்தார்கள்!

தகுதியுள்ள மகளிருக்கு உரிமைத்தொகை வழங்கப்படும் என்று சொன்னதை, தேர்தல் வாக்குறுதிக்கு முரணாக செய்கிறார்கள் என்று பேசினார்கள்! நாம் தொடக்கத்தில் இருந்தே தெளிவாக சொன்னோம். தகுதி உள்ளவர்கள் யார் யாரென்று நேர்மையான, பாரபட்சமற்ற விதிமுறைகளின் அடிப்படையில், அரசு சார்பில் வெளியிடப்பட்டு, தமிழ்நாட்டில் இருக்கின்ற அத்தனை குடும்ப அட்டைதாரர்களையும் விண்ணப்பிக்க சொன்னோம்.

**2.24 கோடி குடும்ப அட்டைதாரர்களில் 1.63 கோடி மகளிர் விண்ணப்பம்!**

இந்தத் திட்டத்தின் நோக்கத்தையும், விதிமுறைகளின் குறிக்கோளையும் மக்கள் உள்ளார்ந்து புரிந்துகொண்ட காரணத்தால், 2 கோடியே 24 இலட்சம் குடும்ப அட்டைதாரர்களில், 1 கோடியே 63 இலட்சம் மகளிர் மட்டும் விண்ணப்பித்தார்கள்!

மக்களுடைய இந்த புரிதல், இந்தத் திட்ட விதிமுறைகளுக்கான நியாயத்தை காண்பித்தது. விமர்சித்தவர்கள் அமைதி ஆகிவிட்டார்கள். இப்படி விண்ணப்பித்தவர்களிலிருந்து, 1 கோடியே 6 இலட்சத்து 58 ஆயிரத்து 375 தகுதியுள்ள மகளிர் தேர்ந்தெடுக்கப்பட்டு, எல்லோருக்கும் அவர்களுடைய வங்கிக் கணக்கில், இந்தத் திட்டம் தொடங்குவதற்கு ஒரு நாள் முன்பாகவே, அதாவது, செப்டம்பர் 14 ஆம் தேதியே, அந்த மாதத்திற்கான உரிமைத்தொகையான 1000 ரூபாயை நாம் வரவு வைத்தோம். அந்த மாதம், வங்கிக் கணக்கு இல்லாத 2 இலட்சத்து 42 ஆயிரத்து 956 பயனாளிகளுக்கு, மணியார்டர் மூலம் ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டது.

அடுத்து அக்டோபர் 15ஆம் தேதி வங்கிக் கணக்குகளில் வரவு வைத்தோம். மணியார்டர் மூலம் உரிமைத்தொகை வழங்கப்பட்ட மகளிருக்கு, வங்கிக் கணக்கு தொடங்க நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறோம்.

இவ்வளவு பெரிய திட்டம்! ஒரு கோடிக்கும் அதிகமான பயனாளிகள்! அவர்கள் அனைவருக்கும் 1000 ரூபாய்! ஆனால், எந்தச் சிறிய புகாருக்கும் இடமில்லை! அதுதான், இந்தத் திட்டத்தின் மிகப்பெரிய வெற்றி! அந்தப் பெருமிதத்துடன் சொல்கிறேன், 'கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம்' நாட்டிற்கே முன்னுதாரணமாக அமைந்திருக்கக்கூடிய திட்டம்!

**54,220 அலுவலர்கள் நியமிக்கப்பட்டனர்!**

ஒரு திட்டம் பெற்ற வெற்றியைத் தொடர வேண்டுமென்றால், அதை தொடர்ந்து கவனிக்கவேண்டும்! அதனால், முகாம்களில் விண்ணப்பித்து, தகுதி இருந்தும் தேர்ந்தெடுக்கப்படாத விண்ணப்ப தாரர்களுக்கும், முகாம்களில் பெறப்பட்ட விண்ணப்பங்களில், பதிவாகாமல் போன விண்ணப்பதாரர்கள் விண்ணப்பங்களும் தரவுகளை தொடர்ந்து சரிபார்க்கப்பட்டது. இதற்காக மட்டுமே அரசின் பல்வேறு துறைகளைச் சார்ந்த ஏறக்குறைய 54,220 அலுவலர்கள் மாவட்ட அளவிலும், கிராம அளவிலும் நியமிக்கப்பட்டார்கள். அவர்கள் சரி பார்த்து ஒரு பட்டியலை எங்களுக்கு கொடுத்திருக்கிறார்கள். அதில் இந்த மாதத்திலிருந்து, 7 இலட்சத்து 35 ஆயிரம் மகளிர் புதிய பயனாளிகளாக சேர்க்கப்பட்டிருக்கிறார்கள்.

புதிய பயனாளிகளான என் அன்புச் சகோதரிகள் அனைவருக்கும் முதலில் என்னுடைய வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்! உங்களுக்கான 1000 ரூபாய் நேற்றே உங்கள் கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது!

உங்களுடன் சேர்த்து, மொத்தம் 1 கோடியே 13 லட்சத்து 84 ஆயிரத்து 300 பேர் 'கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தில் '1000 ரூபாய் இனி பெறப்போகிறார்கள். நீங்கள் மட்டுமல்ல, தகுதியுள்ள யாரும் விடு பட்டு விட கூடாது என்று கவனமாக இருக்கிறோம். அதானல்தான், விண்ணப்பித்தவர்கள் தேர்ந்தெடுக்கப்படவில்லை என்றால், ஏன் தேர்ந்தெடுக்கப்படவில்லை என்ற காரணத்தை, குறுஞ்செய்தியாக அனுப்பி வைத்தோம். அந்தக் காரணம் ஏற்புடையதாக இல்லையென்றால், மேல்முறையீடு செய்யவும் வாய்ப்பு கொடுத்தோம். அதை பயன்படுத்தி, மேல்முறையீடு செய்தார்கள். அவர்களுடைய விண்ணப்பங்களையும் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறோம்.

**தகுதியுள்ள அனைவருக்கும் உரிமைத் தொகை கிடைக்கும்!**

சரிபார்ப்பு அலுவலர்கள் கள ஆய்வு செய்து, தகுதிபெறும் மகளிருக்கு, வருகிற டிசம்பர் மாதத்தில் இருந்து, 'கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம்' மூலமாக 1000 ரூபாய் வழங்கப்படும். தகுதியுள்ள அனைவருக்கும் இந்த உரிமைத் தொகை கிடைக்கின்ற வரைக்கும், திராவிட மாடல் அரசின் இந்தப் பணி நிச்சயம் தொடரும்!

கடந்த மார்ச் 27 ஆம் தேதி சட்டமன்றத்தில் இந்தத் திட்டத்தைப் பற்றி பேசும்போது, ஏறத்தாழ 1 கோடி குடும்பத் தலைவிகளுக்கு, மாதம் 1000 ரூபாய் வழங்கிடும் வகையில் இந்தத் திட்டம் அமையும் என்று நான் சொன்னேன். ஆனால், இன்றைக்கு, 1 கோடியே 13 இலட்சத்து 84 ஆயிரத்து 300 பயனாளிகள் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். இது தான் இந்தத் திட்டத்தின் மிகப்பெரிய வெற்றி!

இதே மாதிரியான திட்டம், வேறு மாநிலங்களில் செயல்படுத்தப்பட்ட போது, பொதுமக்கள் கூட்ட நெரிசல்களில் எப்படிப்பட்ட இன்னல்களுக்கும், அலைக்கழிப்புக்கும் ஆளாகினார்கள் என்று ஊடகங்களில் வந்தது. அதுமாதிரி எந்த நிகழ்வும் இல்லாமல் அமைதியான முறையில் அனைத்து தகுதியுள்ள மகளிரையும் இந்தத் திட்டம் சென்று சேர்ந்திருக்கிறது. எந்தவிதமான சர்ச்சைக்கும் இடமளிக்காத வகையில் இந்தத் திட்டத்தை செயல்படுத்திக் காட்டிய பெருமை, அரசு அலுவலர்களையும், பணியாளர்களையும்தான் போய்ச் சேரும்!

**அமைச்சர் உதயநிதி ஸ்டாலினுக்கு என்னுடைய வாழ்த்துகள்!**

இந்தத் திட்டத்திற்குப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் தம்பி உதயநிதி அவர்கள், அரசு அலுவலர்களுடன் இந்தத் திட்டச் செயல்பாடு குறித்து தொடர்ந்து ஆய்வுக் கூட்டங்கள நடத்திக்கொண்டே இருப்பார்.

அவருக்கும் என்னுடைய வாழ்த்துகள். தொடர்ந்து களத்திலும் ஆய்வு செய்துகொண்டு இருக்கிறார். அது இனியும் தொடரும். அதில் எந்தவித சந்தேகமும் உங்களுக்கு இருக்க வேண்டிய அவசியமில்லை.

நம்முடைய தலைமைச் செயலாளர், வளர்ச்சி ஆணையர், நிதித் துறைச் செயலாளர் உள்ளிட்ட உயர் அலுவலர்கள் கடந்த சில மாதங்களாக, ஏறக்குறைய 50 முறைக்கும் மேலாக ஆய்வுக் கூட்டங்களை நடத்தி இந்தத் திட்டத்தில் எந்தவித குறைபாடும் ஏற்படாமல் செயல்படுத்துவது குறித்து விவாதித்திருக்கிறார்கள்.

ஒட்டுமொத்தமாக சொல்லவேண்டும் என்றால், அமைச்சர்கள், அரசு உயர் அலுவலர்கள், மாவட்ட ஆட்சியர்கள் முதல், தமிழ்நாட்டின் கடைக்கோடியில் உள்ள கிராம நிர்வாக அலுவலர், ஊராட்சி செயலர், இல்லம் தேடிக் கல்வி தன்னார்வலர்கள் என அனைத்து நிலை பணியாளர்களும் தொடர்ந்து உழைத்ததின் விளைவுதான், இந்த மாபெரும் வெற்றி!

இது, ஊர் கூடி, 'இழுத்த தேர்!' ஊருக்காக நம்முடைய திராவிட மாடல் அரசு, 'உருவாக்கிய தேர்!'

'மக்களின் தேர்' இது! தேசிய ஊடகங்களும், பிற மாநில அரசுகளும் கூட நம்முடைய இந்த திட்டமிடல், நிர்வாக நடைமுறையை வியந்து பார்க்கிறார்கள். அந்த வகையில், இந்தத் திட்டம் இவ்வளவு பெரிய இமாலய வெற்றி பெற உழைத்திட்ட அனைவருக்கும் என்னுடைய மனம் நிறைந்த வாழ்த்துகளையும், என் நெஞ்சார்ந்த நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மிகப்பெரிய சாதனையை அமைதியாக செய்து காட்டி இருக்கிறோம். திராவிட மாடல் ஆட்சியில், இந்தியாவிற்கே எடுத்துக்காட்டான மாநிலமாக, தமிழ்நாடு தொடர்ந்து வளரும்! வளரும்!

நிறைவாக, தமிழ்நாடு முழுவதும் இன்றைக்கு நிகழ்ச்சியில் பங்கேற்ற சகோதரிகள் அனைவருக்கும் மீண்டும் உங்களில் ஒருவனான இந்த ஸ்டாலினுடைய வாழ்த்துகளை தெரிவித்து விடைபெறுகிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.



நீலகிரி மாவட்டம், கூடலூர் நர்த்தகி மண்டபத்தில் நேற்று முன்தினம் (10.11.2023) நடைபெற்ற கலைஞர் மகளிர் உரிமைத்திட்ட விழாவில் சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் பயனாளிகளுக்கு பணம் எடுக்கும் பற்றட்டை மற்றும் தகவல் கையேடுகளை வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.அருணா, மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.கீர்த்தி பிரியதர்சினி, நகராட்சி தலைவர்கள் திருமதி.பரிமளா (கூடலூர்), திருமதி.சிவகாமி (நெல்லியாளம்), கூடலூர் ஊராட்சி ஒன்றிய தலைவர் திருமதி.கீர்த்தனா உட்பட பலர் உள்ளனர்.




முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சென்னை கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்ற விழாவில் புதிய பயனாளிகளாக தேர்ந்து எடுக்கப்பட்ட 7லட்சத்து 35 ஆயிரம் மகளிர் பயன்பெறும் வகையில் மகளிருக்கு மாதந்தோறும் ரூ 1000 வழங்கிடும் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தை தொடங்கி வைத்ததையடுத்து. கோயம்புத்தூர் கொடிசியா வளாகத்தில் நடைபெற்ற விழாவில் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை அமைச்சர் சு.முத்துசாமி தகுதியுள்ள பயனாளிகளுக்கு பற்று அட்டைகளை வழங்கினார். மாவட்ட ஆட்சியர் கிராந்திகுமார் பாடி, மேயர் கல்பனா ஆனந்தகுமார், ஆணையாளர் சிவகுரு பிரபாகரன், துணை மேயர் வெற்றிசெல்வன், இளஞ்செல்வி கார்த்திக், மாவட்ட செயலாளர்கள் நா.கார்த்திக், தொண்டாமுத்தூர் ரவி, தளபதி முருகேசன் ஆகியோர் உடனிருந்தனர்.

### திருவள்ளூர் மாவட்ட முன்னாள் செயலாளர்

# மறைந்த கும்மிடிப்பூண்டி கி.வேணுவின் திருவுருவப் படம்!

### கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி. திறந்து வைத்தார்! ஆர்.எஸ்.பாரதி - கழக முன்னணியினர் பங்கேற்பு!

திருவள்ளூர், நவ. 12-

திருவள்ளூர் முன்னாள் மாவட்டக் கழகச் செயலாளரும் முன்னாள் கும்மிடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினரும் கழக உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினருமான கும்மிடிப்பூண்டி கி.வேணுவின் படத்திறப்பு விழா ஒன்றியச் செயலாளர் கி.வே. ஆனந்தகுமார் ஏற்பாட்டில் அவரது பனப்பாக்கம் இல்லத்தில் படத்திறப்பு விழாவும் கவரப்பேட்டையில் தனியார் திருமண மண்டபத்தில் புகழ் வணக்கம் கூட்டமும் நடைபெற்றது.

நிகழ்வில் கழக அமைப்புச் செயலாளர் ஆர் எஸ் பாரதி முன்னிலையில் மாவட்டக் கழக செயலாளர் டி.ஜெ.கோவிந்தராஜன் எம்.எல்.ஏ. தலைமையில் கழக பொருளாளர் டி.ஆர். பாலு எம்.பி. திருவுருவப் படத்தை திறந்து வைத்து தொடர்ந்து நடைபெற்ற மறைந்த கும்மிடிப்பூண்டி முன்னாள் எம்.எல்.ஏ. கி.வேணுவின் புகழஞ்சலி நிகழ்ச்சியில் பேசிய தி.மு.க. பொருளாளர் டி.ஆர்.பாலு, தி.மு.க. அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி எமர்ஜென்சி காலத்தில் மிசாவில் மறைந்த முத்தமிழறிஞர் கலைஞருடனும், தமிழக முதல்வர் மு. க. ஸ்டாலினுடனும் ஒன்றரை ஆண்டு சிறையில் இருந்ததை குறிப்பிட்ட தோடு, ஒருங்கிணைந்த செங்கல்பட்டு மாவட்டத்தின் மாவட்டச் செயலராக அவர் இருந்த போதும், கும்மிடிப்பூண்டி எம்.எல்.ஏ. ஆக இருமுறை அவர் இருந்த போதும் கட்சி வளர்ச்சிக்காகவும் பொது மக்கள் நன்மைக்காகவும் அவர் ஆற்றிய பணிகள் போற்றுதற்குரியது என்றும் பேசினர்.

இந்த நிகழ்வில் கைத்தறி துணி நூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி, திருவள்ளூர் மத்திய மாவட்டக் கழகச் செயலாளர் ஆவடி சா.மு.நாசர், மாவட்டச் செயலாளர் சிற்றரசு. பூந்தமல்லி எம்எல்ஏ ஆ.கிருஷ்ணசாமி, எழும்பூர் எம்.எல்.ஏ. இ.பரந்தாமன், மாநில மாவட்ட நிர்வாகிகள் இ.ஏ.பி.சிவாஜி, திருத்தணி எம்.பூபதி, வழக்கறிஞர் அன்புவாணன், கன்னிகை ஸ்டாலின், திருவள்ளூர் கிழக்கு மாவட்ட தி.மு.க. நிர்வாகிகள் பகலவன், கதிரவன், கே.வி.ஜி. உமா மகேஸ்வரி, ரவி, டாக்டர் பரிமளம், பொதுக்குழு உறுப்பினர் பா.செ. குணசேகரன், வெங்கடாஜலபதி, சுப்பிரமணி, ஏ.வி.ராமமூர்த்தி

தி.மு.க. ஒன்றியச் செயலாளர்கள் மு.மணிபாலன், ந. பரிமளம், டி.கே.சந்திரசேகர், எம்.எஸ்.கே.ரமேஷ் ராஜ், செல்வசேகரன், அறிவழகன், ஜான் பொன்னுசாமி, அபிராமி குமரவேல், ஜெகதீசன், தமிழ் உதயன், ஜி.ரவி, மோகன் ராஜ், முத்து, தங்கம் முரளி, சி.ஜெ.சீனிவாசன், ஜி.ரவீந்திரா,

சக்திவேல், மாவட்ட தொண்டர் அணி தலைவர் மெதூர் எம்.எஸ். முத்துக்குமார் கும்மிடிப்பூண்டி ஒன்றிய தி.மு.க. நிர்வாகிகள் திருமலை, பிரபு, ராமஜெயம், புலியூர் புருஷோத்தமன், பரத்குமார்,ஒன்றிய கவுன்சிலர்கள் ஜோதி, அரிபாபு, அமலா சரவணன், மற்றும் மாநில மாவட்ட நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் கலந்து கொண்டார்கள்.

### பண்டிகை நாளையொட்டி

# அரசு மருத்துவமனைகளில் தீக்காய சிகிச்சைக்கு சிறப்பு வார்டுகள் தயார்!

### மருத்துவத்துறை அதிகாரிகள் தகவல்!

வேலூர், நவ.12 -

தீபாவளி பண்டிகையொட்டி அரசு மருத்துவமனைகளில் தீக் காய சிகிச்சைக்கு சிறப்பு வார்டுகள் தயார் நிலையில் உள்ளதாக மருத்துவத்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

நாடு முழுவதும் இன்று தீபாவளி பண்டிகை கொண் டாடப்படுகிறது.

இந்நிலையில் பட்டாசு வெடிக்கும்போது, எதிர்பாராதவிதமாக வெடிவிபத்துகள் ஏற்பட்டு தீக்கா யமடைந்தவர்களுக்கு சிகிச்சை அளிக்க மாநிலம் முழுவதும் அரசு மருத்துவமனைகளில் தீக்காயம் சிறப்பு வார்டுகள் தயார் நிலையில் வைக்கப்படும் என்று சுகாதாரத் துறை அமைச்சர் ம.சுப்பிரமணியன் தெரிவித்தார். அதன்படி மாநிலம் முழுவதும் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைகள், மாவட்ட தலைமை அரசு மருத்துவமனை கள், அரசு மருத்துவமனைகளில் சிறப்பு தீக்காயம் வார்டுகள் தயார் செய்யப்பட்டு வைக்கப்பட்டுள் ளது.

இதுகுறித்து மருத்துவத்துறை அதிகாரிகள் கூறியதாவது:


அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை மற்றும் தலைமை மருத்துவமனைகளில் தீக்காயம் சிகிச்சை பிரிவுக்கு தனி கட்டிடம் செயல்பட்டு வருகிறது. இந்த கட்டி டங்களில்தான் நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. தற்போது தீபாவளி பண்டிகை யொட்டி பட்டாசு வெடிப்பதால் ஏற்படும் தீக்காயத்திற்கு சிகிச்சையளிக்க கூடுதலாக படுக்கைகள் ஒதுக்கப்பட்டுள்ளது.

மேலும் அவசர சிகிச்சை பிரிவில் ஐசியூ வசதியுடன் கூடிய படுக்கைகள் உள்ளது. தீக்காயங்களுடன் வருபவர்களுக்கு தேவையான படுக்கை வசதிகள் செய்யப்பட்டுள்ளது. அவர் களுக்கு உடனடியாக சிகிச்சை அளிக்க போதுமான அளவு மருந்துகள் கையிருப்பு உள்ளது. இதற்காக மருத்துவக்குழுவினர் நியமனம் செய்யப்பட்டு தயார் நிலையில் உள்ளனர். இவர்கள் 24 மணி நேரம் சுழற்சி முறையில் பணியாற்றுவார்கள்.

இவ்வாறு அவர்கள் கூறினர்.



திருத்துறைப்பூண்டியில் தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா மகளிர்களுக்கு கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்திற்கான பற்று அட்டையினை வழங்கினார்கள். சட்டமன்ற உறுப்பினர்கள் பூண்டி.கே.கலைவாணன், க.மாரிமுத்து, எம்.செல்வராஜ் எம்.பி., மாவட்ட ஆட்சித்தலைவர் சாருஸ்ரீ, மாவட்ட ஊராட்சித்தலைவர் தலையாமங்கலம் ஜி.பாலு, தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஆர்.எஸ்.பாண்டியன், நகர்மன்றத் தலைவர் கவிதா பாண்டியன், ஒன்றியச் செயலாளர்கள் பிரகாஷ், பால.ஞானவேல், டி.எஸ்.டி.முத்துவேல், கே.வி.கே.ஆனந்த், பொதுக்குழு உறுப்பினர்கள் செல்வ.ஜெயதேவன், கலைவாணி மோகன் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.




தருமபுரி மேற்கு மாவட்டம் பாலக்கோட்டில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் ரூ.83.50 லட்சம் மதிப்பீட்டில் புனரமைப்பு செய்யப்பட்ட பேருந்து நிலையத்தை தமிழக வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் திறந்து வைத்து, பல்வேறு நீடிக்கப்பட்ட வழித்தட பேருந்து சேவையினை துவக்கி வைத்தார்.உடன் மாவட்ட ஆட்சியர் திருமதி.சாந்தி, மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் பி.பழனியப்பன்,கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் தடங்கம்.பெ.சுப்ரமணி,விவசாய அணி மாநில துணைச் செயலாளர் சூடப்பட்டி.சுப்ரமணி மாவட்ட துணைச் செயலாளர் ஆ.மணி, பேரூராட்சி தலைவர் பி.கே.முரளி,ஒன்றிய செயலாளர்கள் முனியப்பன், பி.எஸ்.சரவணன், முத்துக்குமார், நெசவாளர் அணி மாவட்ட அமைப்பாளர் ராஜபார்ட் ரங்கதுரை மற்றும் கழகத்தினர் கலந்து கொண்டனர்.

### ஆன்லைன் ரம்மி தடை வழக்கில்

# சென்னை உயர்நீதிமன்றத் தீர்ப்பை எதிர்த்து மேல்முறையீடு!

### சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி அறிவிப்பு!



சென்னை, நவ. 12-

தமிழ்நாட்டில் ஆன்லைன் சூதாட்ட விளையாட்டுகளால் இளைஞர்கள் உட்பட பலர், லட்சக்கணக்கில் பணத்தை இழந்து, அதனால் தற்கொலை செய்து கொண்ட நிகழ்வுகள் தொடர்ந்து நடந்ததால், ஆன்லைன் விளையாட்டுகளின் தாக்கம் குறித்து ஆய்வுசெய்ய முன்னாள் நீதிபதி சந்துரு தலைமையில் குழு அமைத்ததுடன் பொதுமக்களிடமும் தமிழ்நாடு அரசு கருத்துகளைக் கேட்டது.

பெரும்பான்மையானோர் ஆன்லைன் சூதாட்டத்தை தடை செய்ய ஆதரவு தெரிவித்தனர். கடந்தாண்டு அக்டோபர் 1 ஆம் தேதி தமிழ்நாடு இணைய வழி சூதாட்டத்தை தடை செய்தல், ஒழுங்குபடுத்துதல் அவசரச் சட்டத்திற்கு, ஆளுநர் ஒப்புதல் அளித்தார். பிறகு, அவசரச் சட்டத்திற்கு பதிலாக, அதில் உள்ள ஷரத்துகளில் எந்த மாற்றமும் செய்யாமல், சட்டப்பேரவையில் அக்டோபர் 19 ஆம் தேதி மசோதா நிறைவேற்றப்பட்டு, ஆளுநரின் ஒப்புதலுக்காக அனுப்பி வைக்கப்பட்டது. மசோதாவில் ஆளுநர் சில விளக்கங்களை கோரினார். 24 மணிநேரத்தில் விளக்கங்களும் அளிக்கப்பட்டன. ஆளுநர் 131 நாட்கள் கழித்து, ஆநர் ஆர்.என்.ரவி, அந்த மசோதாவை அரசுக்கு திருப்பி அனுப்பினார்.

இதைத்தொடர்ந்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் மார்ச் 23ஆம் தேதி இரண்டாவது முறையாக தாக்கல் செய்த சட்ட மசோதா ஒருமனதாக பேரவையில் நிறைவேற்றப்பட்டது. அடுத்த நாளே ஆளுநரின் ஒப்புதலுக்காக மசோதா மீண்டும் அனுப்பி வைக்கப்பட்டது. மசோதாக்களுக்கு ஆளுநர் ஒப்புதல் அளிக்க கால நிர்ணயம் விதிக்க வேண்டும் என வலியுறுத்தி, பேரவையில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களால் தனித் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது. இதையடுத்து, ஆன்லைன் சூதாட்ட தடை மசோதாவுக்கு கடந்த ஏப்ரல் 11 ஆம் தேதி ஆளுநர் ஆர்.என்.ரவி ஒப்புதல் அளித்தார். பின்னர், ஆன்லைன் சூதாட்ட தடை சட்டம் உடனடியாக தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட்டு ஏப்ரல் 12ஆம் தேதி அமலுக்கு வந்தது. அதன்படி, ஆன்லைனில் பணம் வைத்து விளையாடினால் 3 மாதம் சிறை அல்லது 5 ஆயிரம் அபராதம் விதிக்கவும், ஆன்லைன் சூதாட்ட தடை சட்டத்தை மீறும் நிறுவனங்களுக்கு 10 லட்சம் அபராதம் அல்லது 3 ஆண்டு சிறை தண்டனை வழங்கவும் இச்சட்டம் வழிவகை செய்கிறது.

இதனிடையே, ஆன்லைன் சூதாட்ட தடைச் சட்டத்தை எதிர்த்து ஆன்லைன் விளையாட்டு நிறுவனங்கள் தாக்கல் செய்த வழக்கில் ஆன்லைன் சூதாட்டத்தை முழுமையாக தடை செய்ய உயர்நீதிமன்றம் மறுத்துவிட்டது. அதிர்ஷ்ட அடிப்படையிலான ஆன்லைன் விளையாட்டுக்களை தடை செய்தது செல்லும் என்று மட்டும் தீர்ப்பு வழங்கியது. இந்நிலையில், ஆன்லைன் சூதாட்ட சூதாட்ட தடை வழக்கில் மேல்முறையீடு செய்யப்படும் என்று சட்டத்துறை அமைச்சர் எஸ். ரகுபதி தெரிவித்துள்ளார்.

புதுக்கோட்டையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், ஆன்லைன் ரம்மி, போகருக்கு தடை ரத்து செய்யப்பட்டது குறித்து ஆலோசித்து மேல்முறையீடு செய்யப்படும் என்று கூறியுள்ளார்.

### மொழிப்போர்த் தியாகி மதுரை மாவட்டம்

# உசிலம்பட்டி ஜி.நடராஜன் மறைவு!

### கழகத்தினர் அஞ்சலி!



மதுரை, நவ.12-

மதுரை மாவட்டம் உசிலம்பட்டி தாலுகா உசிலம்பட்டி நகரம் வார்டு எண் 19 வைரவலிங்கம் ஆசாரி தெருவைச் சேர்ந்த ஜி. நடராஜன் (வயது 80) த/பெ கோபால் அவர்கள் கடந்த 31.10. 2023 அன்று உடல்நலக்குறைவால் இயற்கை எய்தினார் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

தகவல் அறிந்ததும் கழக நிர்வாகிகள், தோழர்கள் அன்னாரது உடலுக்கு இறுதி அஞ்சலி செலுத்தினர். அவர் தன்னுடைய 20 வயது முதல் அந்திமக்காலம் வரை திராவிட சித்தாந்தத்தில் தன்னை முழுமையாக அர்ப்பணித்தவர்.

1964 இல் நடைபெற்ற இந்தி எதிர்ப்பு போராட்டத்தில் பேரறிஞர் அண்ணாவின் வழிகாட்டுதலின் படியும் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் கொள்கை வழியிலும், தலைமையிலும் அந்த அறப்போரில் தன்னை ஈடுபடுத்தி ரயில் மறியலிலும் கலந்துகொண்டவர்.

அதனால் ஆறு மாத காலம் முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களுடன் மத்திய சிறைகளில் சிறை வாசம் அனுபவித்தவர்.

அதன் பயனாய் பேரறிஞர் அண்ணாவால் "மொழிப் போர்த் தியாகி" என கௌரவிக்கப்பட்டு, அவரின் திருக்கரங்களால் மதுரையில் நடைபெற்ற மாநாட்டில் பாராட்டுப் பத்திரமும் பெற்றவர்.

அந்நாள் முதல் இளமை காலத்தில் இருந்தே தன்னை திராவிட முன்னேற்றக் கழகத்திற்காகவும் இந்நாளில் வெற்றிகரமாக நடைபெற்றுக் கொண்டு இருக்கும் தளபதியாரின் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் திராவிட மாடல் ஆட்சிக் காலம் வரையிலும் தன்னை அர்ப்பணித்தவர்.

மறைந்த ஜி.நடராஜன் அவர்களுக்கு ந.வளர்மதி என்கிற மனைவியும், ந.இளங்கோவன், ந.ஈஸ்வரன் என்கிற இரண்டு மகன்களும் உள்ளனர்.

### திருத்துறைப்பூண்டியில்

# மகளிர் உரிமைத் தொகை வழங்கும் விழா!

### அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா - பூண்டி கே.கலைவாணன் பங்கேற்பு!

திருவாரூர், நவ.12-

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களால் சென்னை கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்ற கலைஞர் மகளிர் உரிமைத் தொகை வழங்கும் இரண்டாம் கட்ட விழாவினை தொடர்ந்து, திருவாரூர் மாவட்டம்திருத்துறைப்பூண்டி வட்டத்திற்குட்பட்ட ஏ.ஆர்.வி. திருமண மண்டபத்தில், தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா மகளிர்களுக்கு கலைஞர் மகளிர் உரிமை திட்டத்திற்கான பற்று அட்டையினை வழங்கினார்கள்.

சட்டமன்ற உறுப்பினர்கள் பூண்டி.கே.கலைவாணன், க.மாரிமுத்து, எம்.செல்வராஜ் எம்.பி., மாவட்ட ஆட்சித்தலைவர் சாருஸ்ரீ, மாவட்ட ஊராட்சித்தலைவர் தலையாமங்கலம் ஜி.பாலு, தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஆர்.எஸ்.பாண்டியன், நகர்மன்ற தலைவர் கவிதா பாண்டியன், ஒன்றிய செயலாளர்கள் பிரகாஷ், பால.ஞானவேல், டி.எஸ்.டி.முத்து வேல், கே.வி.கே.ஆனந்த், பொதுக்குழு உறுப்பினர்கள் செல்வ.ஜெயதேவன், கலைவாணி மோகன் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

திருவாரூர் மாவட்டம் திருத்துறைப்பூண்டியில் ஏ.ஆர்.வி. திருமண மண்டபத்தில் ஆயிரக்கணக்கான மகளிர் திரண்டிருந்த பிரமாண்ட கூட்டத்தில் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தின் கீழ் 1000 மகளிர்களுக்கு உரிமைத் தொகை பெறுவதற்கான வங்கி பற்று அட்டையினை தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா வழங்கினார்.

முன்னதாக திருத்துறைப்பூண்டி அரசு மருத்துவமனையில் ரூ.25.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட புதிய இரத்த வங்கி கட்டடத்தினை தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா திறந்து வைத்தார்.

திருத்துறைப்பூண்டி அரசு மருத்துவமனையில் 71.18 ச.மீட்டரில், ரூ.25 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட புதிய இரத்த வங்கியின் தரை தளத்தில் காத்திருப்பு நுழைவாயில், மருத்துவ பரிசோதனை அறை, ஸ்டெரிலைசேஷன் அறை, ரெப்ரஷ்மெண்ட் அறை, பிளெபோடோமி அறை, செரோலஜி அறை, சேமக்காப்பறை மற்றும் கழிப்பறை வசதிகளுடன் அமையப்பெற்றுள்ளது.



தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இரண்டாம் கட்ட மகளிர் உரிமைத் தொகை திட்டத்தை சென்னையில் தொடங்கி வைத்ததையடுத்து மயிலாடுதுறை மாவட்டம் வைத்தீஸ்வரன்கோயிலில் நடைபெற்ற இரண்டாம் கட்டமாக மகளிர் உரிமைத் தொகை வழங்கும் விழாவில் 8446 மகளிர் பயனாளிகளுக்கு சுற்றுச்சூழல் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் பயனாளிகளுக்கு பற்று அட்டைகளை வழங்கினார். உடன் மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளரும், பூம்புகார் சட்ட மன்ற உறுப்பினருமான நிவேதா எம்.முருகன், சட்ட மன்ற உறுப்பினர்கள் எம்.பன்னீர்செல்வம், எஸ்.ராஜ்குமார் விழாவிற்கு மயிலாடுதுறை மாவட்ட ஆட்சித் தலைவர் ஏ.பி.மகாபாரதி மாவட்டக் கழக பொருளாளர் மகா.அலெக்சாண்டர், மாவட்ட ஊராட்சி தலைவர் உமாமகேஸ்வரிசங்கர், வைத்தீஸ்வரன் கோயில் பேரூராட்சி தலைவர் பூங்கொடி அலெக்ஸ்சாண்டர், ஒன்றியக் குழு தலைவர்கள் காமாட்சிமூர்த்தி, ஜெயபிரகாஷ், மகேந்திரன், மாவட்ட இந்து சமய அறநிலையத் துறை தலைவர் எஸ்.சுவாமிநாதன் மற்றும் பலர் உள்ளனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு ஈரோடு தெற்கு மாவட்டம் மாநகரம் சூரம்பட்டி பகுதி 31வது வட்டக் கழகம், ஈரோடு தெற்கு மாவட்ட, மாநகர மருத்துவ அணி மற்றும் நந்தா மருத்துவக் கல்லூரி மருத்துவமனை சார்பில் சூரம்பட்டிவலசு அம்மன் திருமண மண்டபத்தில் பகுதி கழக செயலாளர் வில்லரசம்பட்டி முருகேசன் தலைமையில் பல்வேறு நோய்களுக்கு சிகிச்சையளிக்கும் மாபெரும் மருத்துவ முகாமினை வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, மதுவிலக்கு ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் சு.முத்துசாமி துவக்கி வைத்தார். நிகழ்வில் மாநகராட்சி மேயர் நாகரத்தினம் சுப்பிரமணியம், துணை மேயர் வி.செல்வராஜ், உள்ளிட்ட மண்டல குழு தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள், மாநில ,மாவட்ட, மாநகர, பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள், மகளிர் அணியினர் பலர் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சென்னை கலைவாணர் அரங்கில் நடைபெற்ற விழாவில் புதிய பயனாளிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட 7 இலட்சத்து 35 ஆயிரம் மகளிர் பயன்பெறும் வகையில் மகளிருக்கு மாதந்தோறும் ரூ.1000/ வழங்கிடும் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தினை தொடங்கி வைத்து வங்கி பற்று அட்டைகளை (ATM Card) வழங்கியதை தொடர்ந்து ஈரோடு வில்லரசம்பட்டி லட்சுமி துரைசாமி திருமண மண்டபத்தில் கலைஞர் மகளிர் உரிமைத் திட்ட பயனாளிகளுக்கு ஏ.டி.எம். அட்டை மற்றும் மகளிர் உரிமை கையேடுகளை வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, மதுவிலக்கு ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் சு.முத்துசாமி வழங்கினார். நிகழ்வில் ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் அ.கணேசமூர்த்தி, மாவட்ட ஆட்சித்தலைவர் ராஜகோபால் சுன்கரா, மாநகராட்சி மேயர் நாகரத்தினம் சுப்பிரமணியம், துணை மேயர் வி.செல்வராஜ், மாநகராட்சி ஆணையாளர் வி.சிவகிருஷ்ணமூர்த்தி, மாவட்ட ஊராட்சி குழு தலைவர் நவமணி, வருவாய் கோட்டாட்சியர் சதீஷ் குமார் உள்ளிட்ட பலர் உள்ளனர்.

### காங்கிரஸ் ஆட்சிக்கு வருவதைத் தடுக்க

# அமலாக்கத்துறை போன்ற விசாரணை அமைப்புகளை பா.ஜ.க. பயன்படுத்துகிறது!

## அகில இந்திய காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே குற்றச்சாட்டு!

வைகுந்த்பூர், நவ. 12- சத்தீஸ்கர் மாநிலம், வைகுந்த்பூர் சட்டமன்றத் தொகுதியில் நடந்த பிரசார கூட்டத்தில் பேசிய அவர், காங்கிரஸ் ஏழைகளுக்கானது என்றார். ஆனால், பா.ஜ.க.வோ அதானி மற்றும் பணக்காரர்களுக்காக பாடுபடும் கட்சி என்று குறிப்பிட்டார்.



காங்கிரஸ் ஆட்சிக்கு வருவதை தடுக்க அமலாக்கத்துறை, சி.பி.ஐ., வருமான வரித்துறையை பா.ஜ.க. பயன்படுத்துவதாக குற்றம் சாட்டிய கார்கே, மோடியின் நட்சத்திர பிரச்சாரக்காரர்களாக விசாரணை அமைப்புகள் இருப்பதாகவும் விமர்சித்துள்ளார்.

5 மாநில தேர்தல் முடிவுகள் நாட்டின் எதிர்காலத்திற்கு மிகவும் முக்கியமானது என்றும் காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே தெரிவித்துள்ளார்.

### திண்டுக்கல் மாவட்டம்

# ஆத்தூர் தொகுதியில் கழக நிர்வாகிகளுக்கு அன்பளிப்பு!

## ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் இ.பெரியசாமி வழங்கினார்!

திண்டுக்கல், நவ.12-

ஆத்தூர் தொகுதியில் திமுக நிர்வாகிகள், பேரூர்கழகம், கிளைக்கழக நிர்வாகிகளுக்கு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் ஐ.பெரியசாமி தீபாவளி வாழ்த்துக்களுடன் அன்பளிப்பு வழங்கியதால் தி.மு.க.வினர் உற்சாகம் அடைந்துள்ளனர்.

ஆத்தூர் தொகுதியில் தொடர்ந்து திமுக நிர்வாகிகளின் பாதுகாவலராக ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி உள்ளார் என தி.மு.க. நிர்வாகிகள் பெருமிதமாக கூறினர்.

திண்டுக்கல் மாவட்டம் ஆத்தூர் சட்டமன்ற தொகுதியில் 1989ம் ஆண்டு முதல் இன்று வரை 34 ஆண்டுகளாக தொடர்ந்து ஒரே தொகுதியில் போட்டியிட்டு மாபெரும் வெற்றி பெற்றவர் ஐ.பெரியசாமி இவர் திமுகவின் துணைப் பொதுச்செயலாளராகவும், ஊரக வளர்ச்சித்துறை அமைச்சராகவும் பதவியில் உள்ளார். ஆட்சியில் இருந்தாலும், இல்லாவிட்டாலும், திமுக தொண்டர்களை பாதுகாப்பதில் ஐ. பெரியசாமி அவர்கள் முன்னோடியாக இருப்பார். தீபாவளி, பொங்கல் பண்டிகையின் போது திமுக நிர்வாகிகளை தனது இல்லத்திற்கு அழைத்து அவர்களுக்கு வாழ்த்து தெரிவித்து அன்பளிப்பு வழங்குவது வழக்கம். இவ்வருடம் ஆத்தூர் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட ஆத்தூர் கிழக்கு மற்றும் மேற்கு ஒன்றியத்திற்கு உட்பட்ட ஒன்றியகழக செயலாளர்கள், நிர்வாகிகள், பேரூர் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், கிளைக் கழக நிர்வாகி களுக்கு தீபாவளி வாழ்த்துக்களுடன் அன்பளிப்பு வழங்கி அவர்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தினார். இதுபோல ரெட்டியார்சத்திரம் தெற்கு ஒன்றியத்திற்கு உட்பட்ட 104 கிளைக்கழக நிர்வாகிகளுக்கும், கன்னிவாடி மற்றும் ஸ்ரீராமபுரம் பேரூர்கழக நிர்வாகி களுக்கும் தீபாவளி வாழ்த்துக்களுடன் அன்பளிப்பு வழங்கி அவர்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தினார். ரெட்டியார் சத்திரம் வடக்கு ஒன்றியத்திற்கு உட்பட்ட வடக்கு ஒன்றிய நிர்வாகிகள், ஊராட்சியில் உள்ள 136 கிளைக்கழக செயலாளர் மற்றும் நிர்வாகிகளுக்கு தீபாவளி வாழ்த்துக்களுடன் அன்பளிப்பு வழங்கி அவர்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தினார். தொடர்ந்து 34 வருடங்களாக தங்களுக்கு வாழ்த்துக்களுடன் அன்பளிப்பும் வழங்கி தங்களை மகிழ்ச்சியில் ஆழ்த்திய ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்களுக்கு நன்றி தெரிவிக்கும் வண்ணம் கிளைக் கழக நிர்வாகிகள் கூறுகையில் எப்போதும் அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள் எங்களை நேரில் அழைத்து வாழ்த்து சொல்லி மகிழ்ச்சியுடன் பண்டிகையை கொண்டாடுங்கள் என்று வாழ்த்து சொல்வார். இவ்வருடம் மருத்துவ சிகிச்சைக்கு பின் ஓய்வு பெற்று வரும் நிலையில் கூட ஆத்தூர் தொகுதி நிர்வாகிகள் மற்றும் தொண்டர்களை மறக்காமல் எங்களுக்கு தீபாவளி வாழ்த்துக்களுடன் ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி அன்பளிப்பு வழங்கியது மனதிற்கு மகிழ்ச்சி அளிக்கிறது என்றனர். அதனால்தான் நாங்கள் எங்கள் தொகுதியின் அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்களை தென்பாண்டி சிங்கம், கூப்பிட்ட குரலுக்கு ஓடிவருபவர் என பெருமையாக சொல்வதில் தனி மகிழ்ச்சி கிடைக்கிறது என்றனர்.

### நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ., முன்னிலை! எம்.பன்னீர்செல்வம் எம்.எல்.ஏ., பங்கேற்பு!

# மயிலாடுதுறை மாவட்டத்தில் 8446 பெண்களுக்கு இரண்டாம் கட்ட மகளிர் உரிமைத் தொகை திட்டம்!

## அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் தொடங்கி வைத்தார்!

நாகை. நவ.12 -

மயிலாடுதுறை மாவட்டம் வைத்தீஸ்வரன்கோயிலில் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம் இரண்டாம் கட்டம் மகளிர் உரிமைத் தொகை வழங்கும் விழா நடைபெற்றது. விழாவிற்கு மயிலாடுதுறை மாவட்ட ஆட்சித் தலைவர் ஏ.பி.மகாபாரதி தலைமை தாங்கினார். மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளரும், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினருமான நிவேதா எம்.முருகன், சட்ட மன்ற உறுப்பினர்கள் சீர்காழி எம்.பன்னீர்செல்வம், மயிலாடுதுறை எஸ். ராஜ்குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாவட்ட வருவாய் அலுவலர் மணிமேகலை வரவேற்றார். விழாவில் மயிலாடுதுறை மாவட்டத்தில் மகளிர் உரிமைத் திட்டத்தின் இரண்டாம் கட்ட மகளிர் உரிமைத் தொகையை சுற்றுச்சூழல், காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் பயனாளிகளுக்கு மகளிர் உரிமைத் தொகைக்கான வங்கி பற்று அட்டைகளை வழங்கி சிறப்புரையாற்றினார்.

விழாவில் தி.மு.க. தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஜி.என்.ரவி, மாவட்டக் கழக பொருளாளர் மகா. அலெக்சாண்டர், மாவட்ட துணைச் செயலாளர் எஸ். செல்வமணி, ஒன்றியக் கழகச் செயலாளர்கள் ஏ.ஜி,ஜெ.பிரபாகர், ப.முருகமணி, பொதுக்குழு உறுப்பினர்கள் எஸ். சுவாமிநாதன், ஹர்சத், மாவட்ட ஊராட்சி தலைவர் உமாமகேஸ்வரிசங்கர், ஒன்றியக் குழு தலைவர்கள் ஜெயபிரகாஷ், மகேந்திரன், காமாட்சிமூர்த்தி, வைத்தீஸ்வரன்கோயில் பேரூராட்சி தலைவர் பூங்கொடி அலெக்சாண்டர், மாவட்ட ஊராட்சி உறுப்பினர் தியாக.விஜயேஸ்வரன், மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள் ஸ்ரீதர், சாந்தி உள்ளிட்ட ஏராளமானவர்கள் கலந்து கொண்டனர்.

விழாவில் சுற்றுச்சூழல் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் பேசுகையில்:- தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்கள் 2021 சட்ட மன்ற தேர்தல் வாக்குறுதியாக குடும்ப தலைவிகளுக்கு மகளிர் உரிமைத் தொகை வழங்கப் படும் என்று தேர்தலில் அறிவித்து தேர்தலில் வெற்றியை தந்தார்கள். தி.மு.க. தேர்தல் வெற்றிக்கு முக்கிய காரணம் நீங்கள் தான். மயிலாடுதுறை மாவட்டத்தில் 100 சதவீத வெற்றியாக 3 சட்ட மன்ற தொகுதிகளிலும் தி.மு.க. கூட்டணி வெற்றிப் பெற்றது. .கடந்த செப்டம்பர் 15ம் தேதி தமிழ்நாடு முழுவதும் 1 கோடியே 6 லட்சத்து 50 ஆயிரம் பெண்களுக்கு கலைஞர் மகளிர் உரிமைத் தொகையை தமிழ்நாடு முதலமைச்சர் வழங்கினார். இன்றைய தினம் தமிழகத்தில் 7 இலட்சத்து 35 ஆயிரம் பெண்களுக்கு இரண்டாம் கட்டமாக கலைஞர் மகளிர் உரிமைத் தொகையை வங்கியின் மூலமாக தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வரவு வைத்துள்ளார்கள். அதன் படி மயிலாடுதுறை மாவட்டத்தில் உள்ள 8446 பெண்களுக்கு வங்கி மூலம் வரவு வைக்கப்பட்டுள்ளார்கள். எஞ்சி இருப்பவர்களுக்கு டிசம்பர் மாதத்திற்குள் மாவட்ட ஆட்சித் தலைவர் கள ஆய்வு மேற்கொண்டு கிடைக்காத வர்களுக்கும் கிடைக்க வழி வகை செய்யப்படும்.

தமிழ்நாட்டில் இது வரை 1 கோடியே 13 இலட்சத்து 85 ஆயிரம் பெண்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. இதற்கு நமது தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திட்டம் வெற்றிகரமாக செயல்படுத்த அனைத்து பணிகளையும் முன்னின்று செயல்படுத்திய இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை மற்றும் சிறப்பு திட்ட செயலாக்கத்துறை அமைச்சர் உதயநிதிஸ்டாலின் அவர்கள் வெற்றிகரமாக இந்த திட்டத்தை செயல்படுத்தியுள்ளார். 50 முறைக்கு மேலாக ஆய்வு கூட்டத்தை நடத்தி பல தடைகளை தாண்டியும் இத்திட்டதை செயல்படுத்தியுள்ளார். மேலும் 50 இலட்சத்திற்கும் மேலான மாற்றுத்திறனாளி மற்றும் முதியோர் உதவித் தொகை பெறும் குடும்பத்தை சேர்ந்தவர்களுக்கு இத் தொகை கிடைக்க வாய்ப்பில்லை என எண்ணினார்கள். ஆனால் நமது இளைஞர் நலன் விளையாட்டு மேம்பாட்ட துறை அமைச்சர் உதயநிதிஸ்டாலின் அவர்கள் மாற்றுத்திறனாளி மற்றும் முதியோர் உதவித் தொகை பெறும் பயனாளியாக இருந்தாலும் அவர்களின் குடும்பத்தை சேர்ந்த குடும்ப தலைவிகளுக்கும் ரூ.1000ம் வழங்கப் படும் என அரசாணை வெளியிட்டார் நம்முடைய முதலமைச்சர் அவர்கள். இதனால் தமிழ்நாட்டில் 34 இலட்சம் பேர் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை பெறும் இந்த பட்டியலில் இடம் பெற்றுள்ளனர்.

தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்கள் பெண்கள் முன்னேற்றத்திற்காக, கல்வி மேம்பாட்டிற்காக பெண்கள் 12ம் வகுப்பு முடித்த பிறகு உயர்கல்வி படிப்பதற்காக தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பெண்கள் கல்வியில் முன்னேற மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் அவர்களின் பெயரில் பெண்கள் உயர்கல்வி பயில ஏதுவாக மாதம், மாதம் ரூ. 1000 பெறும் திட்டமான புதுமைப்பெண் திட்டத்தை வெற்றிகரமாக செயல்படுத்தி வருகிறார். அதே போல பெண்களுககான கட்டணமில்லா நகர பேருந்துகளில் பயணம் செய்யும் திட்டத்தினையும் செயல்படுத்தியுள்ளார்கள். இப்படி பெண்களுக்கென பல்வேறு முத்தான திட்டத்தினை வேறு எந்த முதல்வரும் சிந்திக்காத திட்டத்தினை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சிறப்பாக செயல்படுத்தி வருகிறார். இந்த ரூ.1,000 தொகை மற்றவர்களுக்கு இது ஒரு சிறு உதவியாக இருக்கலாம். ஆனால் அடித்தட்டு மக்களுக்கு நடுத்தர மக்களுக்கு இத் தொகை குடும்ப செலவிற்கும் அவர்களின் பிள்ளைகளின் படிப்பு செலவிற்கும், மருந்து செலவிற்கும் இத் தொகை பெரிதும் உதவியாக இருக்றிது. இத்திட்டம் தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கே இது மிகப்பெரிய மகத்தான திட்டமான கனவு திட்டத்தை நிறைவேற்றியுள்ளார். முதலமைச்சர் அவர்கள் நம்முடை ஒன்றாம் வகுப்பு முதல் 5ம் வகுப்பு வரை படிக்கும் மாணவர்களுக்கு முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் 37,000 பள்ளிகளில் பயிலும் 17 இலட்சம் மாணவ, மாணவிகளுக்கு வழங்கி சாதனை படைத்துள்ளோம்.

கடந்த 10 ஆண்டுகால ஆட்சி எப்படி என்று உங்களுக்கு தெரியும், எப்படி மோசமான ஆட்சி, நிதி நிலை மோசமான கஜானாவை காலி செய்தார்கள். ரூ 5 இலட்சத்து 75 ஆயிரம் கோடி கடன் இந்த நிலையில் இக்கட்டான நிலையில் ஆட்சிக்கு வந்த கழகத்தலைவர் தளபதி அவர்கள் இந்தியாவில் தலைச்சிறந்த மாநிலங்களில் தமிழகத்தை உயர்த்தி காட்டியவர் நம் முதலமைச்சர் அவர்கள். இந்த வெற்றி சாதாரணமாக கிடைக்க வில்லை 24 மணி நேரத்தில் 20 மணி நேரம் உழைத்ததால் இந்த மகத்தான வெற்றியை தளபதி அவர்கள் தந்துள்ளார்கள். பெண்களுக்கான வளர்ச்சி ஒட்டு மொத்த தமிழ்நாட்டின் வளர்ச்சியாக திராவிட மாடல் தத்துவத்தின் அடிப்படையில் சமூக நீதி ஆட்சியை நம்முடைய தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தந்து கொண்டுள்ளார். இந்தியோவே திரும்பி பார்க்கக் கூடிய ஆட்சி, மற்ற மாநிலங்களில் அருகில் இருக்கின்ற ஆந்திரா, கர்நாடகா, தெலுங்கான, கேரளா மாநிலத்தை சேர்ந்தவர்கள் நமக்கு இப்படிபட்ட முதலமைச்சர் கிடைக்க விலையே என்று ஏங்கி பார்க்கக் கூடிய நிலை. தேசிய அளவில் அனைத்து தலைவர்களும் உற்று நோக்கக் கூடிய மகத்தான ஆட்சியை, ஏழை, எளியவர்களுக்கான ஆட்சியை தந்துள்ள முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் மகன் தளபதி அவர்கள் தமிழகத்தில் சாதனைகளை நிகழ்த்தி கொண்டுள்ளார். அப்படிப்பட்ட மகத்தான தலைவருக்கு நாம் எல்லாம் உறுதுணையாக இருக்க வேண்டும். இவ்வாறு சுற்றுச்சூழல் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் பேசினார்.

### மாவட்ட இளைஞர் அணி செயல்வீரர்கள் கூட்டத்தை சிறப்புற நடத்திட

# சேலம் மத்திய மாவட்ட - பகுதி நிர்வாகிகளுடன் கலந்துரையாடல்!

## மாவட்டச் செயலாளர் இரா.இராஜேந்திரன் எம்.எல்.ஏ அறிக்கை!

சேலம், நவ. 12-

சேலம் மத்திய மாவட்டச் செயலாளர் இரா.இராஜேந்திரன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

இரண்டாவது மாநில இளைஞர் அணி மாநாட்டிற்கு முன்னோட்டமாக கழக இளைஞர் அணி செயலாளர், அமைச்சர் உதயநிதி அவர்கள் தலைமையிலும், கழக முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு முன்னிலையிலும் நவம்பர் 19ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ள பிரம்மாண்டமான சேலம் மாவட்ட இளைஞர் அணி செயல்வீரர்கள் கூட்டத்தினை சிறப்பாக நடத்திட வேண்டி 14.11.2023 மற்றும் 15.11.2023 தேதிகளில் மத்திய மாவட்ட கழக, மாநகர கழக நிர்வாகிகள் கீழ்க்கண்ட பகுதி, ஒன்றியங்களுக்கு நேரில் வந்து அந்தந்த பகுதி / ஒன்றியங்களில் உள்ள முக்கிய நிர்வாகிகளை சந்தித்து கலந்துரையாட உள்ளோம்.

எனவே அனைத்து கழக மற்றும் இளைஞர் அணி நிர்வாகிகள் மற்றும் தோழர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன்.



கலந்துரையாடல் கூட்டங்கள் 14.11.2023 செவ்வாய்க்கிழமை பகுதி / ஒன்றியம் நேரம் : பொன்னம்மாபேட்டை பகுதி - காலை 09.30 மணி, அரிசிபாளையம் பகுதி - காலை 10.30 மணி, அம்மாபேட்டை பகுதி - காலை 11.30 மணி, கிச்சிப்பாளையம் பகுதி - காலை 12.30 மணி, குகை பகுதி - மதியம் 01.30 மணி, தாதகாப்பட்டி பகுதி - மாலை 04.30 மணி, கொண்டலாம்பட்டி பகுதி - மாலை 05.30 மணி, செவ்வாய்பேட்டை பகுதி - மாலை 06.30 மணி, குமாரசாமிபட்டி பகுதி - மாலை 07.30 மணி,

15.11.2023 -புதன்கிழமை அஸ்தம்பட்டி பகுதி - காலை 09.30 மணி, அழகாபுரம் பகுதி - காலை 10.30 மணி, மெய்யனூர் பகுதி - காலை 11.30 மணி, சூரமங்கலம் பகுதி - காலை 12.30 மணி, சேலம் வடக்கு ஒன்றியம் - மதியம் 01.00 மணி, தாரமங்கலம் கிழக்கு மற்றும் ஓமலூர் தெற்கு ஒன்றியம் - பிற்பகல் 03.00 மணி, ஓமலூர் வடக்கு மற்றும் ஓமலூர் கிழக்கு ஒன்றியம் - மாலை 04.00 மணி, காடையாம்பட்டி கிழக்கு மற்றும் காடையாம்பட்டி மேற்கு ஒன்றியம் -மாலை 5 மணி.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

### திருவொற்றியூர் மேற்குப் பகுதி –

# 2 வது வட்டம் சார்பில் நீட் விலக்கு கையெழுத்து இயக்கம்!

## பகுதிச் செயலாளர் வழக்கறிஞர் வை.ம.அருள்தாசன் தலைமையில் நடைபெற்றது!

சென்னை, நவ. 12-

தமிழக மாணவர்களின் மருத்துவக் கனவை தகர்த்து மாணவ - மாணவிகளின் உயிர் குடித்து கொண்டிருக்கிற நீட் உயிர் கொல்லி தேர்வை தமிழகத்தில் இருந்து அடியோடு விலக்க வேண்டும் என்கிற கழகத்தலைவரின் ஆணையேற்று விளையாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் 50 நாளில் 50 லட்சம் கையெழுத்து என்கிற மாபெரும் கையெழுத்து இயக்கம் மாவட்டக் கழகச் செயலாளர் மாதவரம் எஸ். சுதர்சனம் எம்.எல்.ஏ. வழிகாட்டலில் திருவொற்றியூர் மேற்கு பகுதி சார்பில் நடைபெற்று வருகிறது.

'நீட் விலக்கு நம் இலக்கு' என்கிற லட்சியத்தோடு கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வேண்டுகோளை ஏற்று திருவொற்றியூர் மேற்கு பகுதி தி.மு.க. சார்பில் இப்பகுதியில் உள்ள அனைத்து வட்டங்களிலும், பள்ளிகள், தொழில் நிறுவன வாயில்கள், மார்க்கெட், மற்றும் இல்லம் தோறும் சென்று மாணவ - மாணவிகள், அவர்களின் பெற்றோர்கள் உட்பட பல்வேறு தரப்பினரிடமும் நீட் தேர்வுக்கு எதிரான கையழுத்துகள் ஆன்லைன் லிங்க் மூலமும், QR கோட் கொண்ட அட்டைகள் பதாகைகள் மூலமும் கையெழுத்து பெறப்பட்டு வருகிறது.



வழக்கறிஞர் திண்டிவனம் சோ.அசோகன் தலைமையில் வழக்கறிஞர்கள், பொதுமக்கள் சார்பில் வைத்த கோரிக்கையை ஏற்று, சார் பதிவு அலுவலகம், கருவூலம் மற்றும் பழைய நீதிமன்றம் செல்லும் வழியில் மழை நீர் தேங்கி, சேறு சகதியில் நடக்க முடியாமல் பொதுமக்கள் அவதிப்பட்டதை சரி செய்து குப்பைகளை அகற்றி, பிளிச்சிங் பவுடர் தெளித்து, கொசு மருந்து அடித்து போர்க் கால நடவடிக்கையை நகர மன்ற தலைவர் திருமதி நிர்மலா ரவிச்சந்திரன், துணை தலைவர் ராஜலட்சுமி வெற்றிவேல், நகராட்சி ஆணையர் திருமதி தமிழ்ச்செல்வி, அலுவலர்கள், துப்புரவு பணியாளர்கள் எடுத்தனர். அவர்களுக்கு பொதுமக்கள் நன்றி தெரிவித்தனர்.





தமிழ்நாடு முதலமைச்சர் தளபதிஅவர்கள் இரண்டாம் கட்ட மகளிர் உரிமைத் தொகை திட்டத்தை சென்னையில் தொடங்கி வைத்ததையடுத்து நாகை மாவட்டம் நாகையில் நடைபெற்ற கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தின் கீழ் இரண்டாம் கட்டமாக மகளிர் உரிமைத் தொகை வழங்கும் விழாவில் 6122 மகளிர் பயனாளிகளுக்கு நாகை மாவட்டக் கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத் தலைவருமான என்.கௌதமன் வழங்கினார். உடன் தாட்கோதலைவர் உ.மதிவாணன், நாகைசட்ட மன்ற உறுப்பினர்கள் முகமதுஷாநவாஸ், நாகைமாலி, நாகை நகர்மன்றத் தலைவர் இரா.மாரிமுத்து மற்றும் பலர் உள்ளனர்.



கோவை மாவட்டத்தில் கடந்த சில தினங்களாக பெய்த கனமழையால் பாதிக்கப்பட்ட பகுதிகளை நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு வீட்டு வசதி நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் சு.முத்துசாமி ஆகியோர் ஆய்வு செய்த போது எடுத்த படம். மாவட்ட ஆட்சியர் கிராந்திகுமார், மண்டல நிர்வாக ஆய்வாளர் சிவராசு, மேயர் கல்பனா, மாவட்டச் செயலாளர்கள் நா.கார்த்திக், தொண்டாமுத்தூர் ரவி, தளபதி முருகேசன், துணை மேயர் வெற்றிச்செல்வன் ஆகியோர் உடனிருந்தனர்.



கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இரண்டாம் கட்டமாக கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தை துவக்கி வைத்தார். அதனைத் தொடர்ந்து விழுப்புரம் அரசு சட்டக் கல்லூரி கூட்ட அரங்கில் நடைபெற்ற விழாவில் உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி கலைஞர் மகளிர் உரிமைத் தொகையை வழங்கினார். விழுப்புரம் மாவட்ட ஆட்சித்தலைவர் சி.பழனி, தெற்கு மாவட்டச் செயலாளர் நா.புகழேந்தி எம்.எல்.ஏ., சட்டமன்ற உறுப்பினர் டாக்டர். இரா.இலட்சுமணன், நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் து.ரவிக்குமார், கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) ஸ்ருதன்ஜெய் நாராயணன், மாவட்ட ஊராட்சி குழு தலைவர் ம.ஜெயச்சந்திரன், மாவட்ட வருவாய் அலுவலர் மு.பரமேஸ்வரி, மாவட்டப் பொருளாளர் இரா.ஜனகராஜ், மாநில ஆதிதிராவிடர் நலக்குழு இணைச் செயலாளர் செ.புஷ்பராஜ், நகர்மன்ற தலைவர் தமிழ்ச்செல்வி பிரபு, வருவாய் கோட்டாட்சியர், நகர் மன்ற துணைத்தலைவர் சித்திக் அலி மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

### முதலமைச்சரால் செயல்படுத்தப்படும் பல்வேறு திட்டங்களில்

# கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம் - ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க திட்டம்!

## அமைச்சர் அர.சக்கரபாணி பெருமிதம்!

திண்டுக்கல், நவ. 12-

கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம், முதலமைச்சர் அவர்களால் செயல்படுத்தப்படும் திட்டங்களில் வரலாற்றுச் சிறப்புமிக்க திட்டம், இத்திட்டத்தில் திண்டுக்கல் மாவட்டத்தில் 3.95 இலட்சம்குடும்பத் தலைவிகள் பயனடைந்துள்ளனர் என உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி குடும்பத் தலைவிகளுக்கு வங்கி பற்று அட்டையினை வழங்கி தெரிவித்தார்.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள், தமிழகத்தில் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தில் கூடுதலாக இணைந்த குடும்பத் தலைவிகளுக்கு மாதம் ரூ.1,000 வழங்கும் பணியை சென்னையில் நேற்று முன்தினம் (10.11.2023) தொடங்கி வைத்தார்.

அதனைத்தொடர்ந்து, உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி திண்டுக்கல் மாவட்டம், தோட்டனூத்து ஊராட்சியில் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தின் கீழ், குடும்பத்தலைவிகளுக்கு வங்கி பற்று அட்டையினை நேற்று முன்தினம் (10.11.2023) மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி மொ.நா.பூங்கொடி, தலைமையில் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி பேசியதாவது:-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பொறுப்பேற்றது முதல் எல்லோருக்கும் எல்லாம் கிடைக்கும் வகையில் சிறப்பான ஆட்சி செய்து கொண்டிருக்கிறார். தேர்தல் நேரத்தில் சொன்ன வாக்குறுதிகளை படிப்படியாக நிறைவேற்றி வருகிறார். 5 பவுனுக்கு குறைவான நகைக்கடன்கள், கூட்டுறவு வங்கிகளில் மகளிர் சுய உதவிக் குழு பெற்ற கடன்களை தள்ளுபடி செய்தார். தமிழக மக்களுக்காக பல்வேறு திட்டங்களை அறிவித்து அதை தொடர்ந்து செயல்படுத்தி, இந்தியாவிலேயே தலைசிறந்த முதல்வராக திகழ்கிறார். தமிழகத்தை அனைத்துத் துறைகளிலும் முதன்மை மாநிலமாக மாற்ற பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொண்டு, தமிழகத்தில் பொற்கால ஆட்சி நடத்தி வருகிறார்.



**முன்மாதிரி மாநிலமாக திகழ்கிறது!**

முதலமைச்சர் அவர்களால், பெண்களின் முன்னேற்றத்திற்காகவும், அவர்களின் வாழ்வினை வளப்படுத்திடும் பொருட்டும், கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம் காஞ்சிபுரம் மாவட்டத்தில் 15.09.2023 அன்று துவக்கி வைக்கப்பட்டது. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவித்து செயல்படுத்தி வரும் அரிய திட்டங்களினாலும், செயல்பாடுகளினாலும் தமிழகம் அனைத்துத் துறைகளில் இந்தியாவிற்கே முன்மாதிரி மாநிலமாக திகழ்கிறது.

முதலமைச்சர் அவர்களால் செயல்படுத்தப்படும் திட்டங்களில் ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க திட்டமாகவும், இந்திய மாநிலங்கள் அனைத்திற்கும் முன்னோடி திட்டமாகவும், பெண்களின் வாழ்வாதாரத்தை பாதுகாத்திடும் வகையிலும், பொருளாதார நிலையை மேம்படுத்திடும் வகையில் குடும்பத்தலைவிகளுக்கு கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

இத்திட்டத்தில் 1.63 கோடி விண்ணப்பங்கள் பெறப்பட்டதில், 1,06,50,000 மகளிர் தகுதியின் அடிப்படையில் தேர்வு செய்யப்பட்டுள்ளன. அவர்களுக்கான தொகை அவர்களுடைய வங்கிக்கணக்கில் செலுத்தப்பட்டு வருகிறது.

கலைஞர் மகளிர் உரிமைத்தொகை கிடைக்கப் பெறாதவர்கள் தகுதியிருப்பின் வருவாய் கோட்டாட்சியர் வாயிலாக விண்ணப்பிக்கலாம். அந்த விண்ணப்பங்கள் பரிசீலனை செய்யப்பட்டு, சம்பந்தப்பட்ட அலுவலர்கள் ஆய்வு மேற்கொண்டு, தகுதியிருப்பின் உரிமைத்தொகை கிடைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தின்கீழ் முகாம்களில் விண்ணப்பித்து கள ஆய்வு நிலுவையில் இருந்த விண்ணப்பங்கள் இறுதி செய்யப்பட்டு, தற்போது புதிதாக கண்டறியப்பட்டுள்ள 7 இலட்சத்து 35 ஆயிரம் பயனாளிகளுக்கும், ஏற்கனவே வழங்கப்பட்டு வரும் 1 கோடியே 6 இலட்சத்து 50 ஆயிரம் பயனாளிகளுடன் சேர்த்து, மொத்தம் 1 கோடியே 13 இலட்சத்து 84 ஆயிரத்து 300 மகளிருக்கு நவம்பர் மாதத்திற்கான உதவித் தொகை இன்று (10.11.2023) வழங்கப்பட்டது.

இத்திட்டத்தில் தற்போது இணைந்துள்ள 7 இலட்சத்து 35 ஆயிரம் மகளிர் உள்ளிட்ட பயனாளிகளுக்கு உரிமைத் தொகை வழங்கிடும் பணியை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சென்னையில் இன்று(10.11.2023) தொடங்கி வைத்துள்ளார்கள்.

**பேர் சொல்லும் திட்டம்!**

திண்டுக்கல் மாவட்டத்தில் மொத்தம் 6,86,171 குடும்ப அட்டைதாரர்கள் உள்ளனர். அதில் முதற்கட்டமாக 3,74,641 குடும்பத் தலைவிகளுக்கு கலைஞர் மகளிர் உரிமைத் தொகை வழங்கப்பட்டு வருகிறது. இன்றையதினம் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம் இரண்டாம் கட்டமாக 21,095 குடும்பத்தலைவிகளுக்கு மாதம் ரூ.1000 வழங்குவதற்கான பற்று அட்டைகள் வழங்கப்படுகிறது. அதில் இந்த விழாவில் 3,142 குடும்பத் தலைவிகளுக்கு பற்று அட்டைகள் வழங்கப்பட்டுள்ளது. ஆக மொத்தம் திண்டுக்கல் மாவட்டத்தில் சுமார் 3,95,736 குடும்பத்தலைவிகள் இத்திட்டத்தில் பயனடைந்துள்ளனர்.

எந்த மாநிலத்திலும் செயல்படுத்தப்படாத அற்புதமான திட்டத்தை முதலமைச்சர் அவர்கள் செயல்படுத்தியுள்ளார். வாழ்நாள் முழுவதும் கிடைக்கும் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் பேர் சொல்லும் திட்டமாகும்.

பிரதிபலன் பாராமல் வாழ்நாளெல்லாம் ஓயாமல் உழைத்துக்கொண்டிருக்கும் பெண்களின் உழைப்புக்குக் கொடுக்கும் அங்கீகாரம் முதன்மையானது. அடுத்து, ஆண்டுக்கு 12 ஆயிரம் ரூபாய் உரிமைத் தொகை என்பது, பெண்களின் வாழ்வாதாரத்திற்கு உறுதுணையாக இருந்து, வறுமையை ஒழித்து, வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி, சுயமரியாதையோடு சமூகத்தில் அவர்கள் வாழ்வதற்கு உறுதுணையாக இருக்க வேண்டும் என்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

கொரோனா நிவாரண உதவியாக 2.30 கோடி குடும்ப அட்டைதாரர்களுக்கு தலா ரூ.4,000, 14 வகையான மளிகைப் பொருட்களும் வழங்கப்பட்டன. பெண்கள் நகரப் பேருந்துகள் கட்டணமில்லாமல் பயணம் மேற்கொள்ள வழிவகையும், "இன்னுயிர் காப்போம் நம்மை காக்கும் 48" திட்டமும் செயல்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் படி, தமிழகத்தில் விபத்தில் சிக்கி காயமடைந்தவர்களுக்கு முதல் 48 மணி நேரத்திற்கு ஆகும் மருத்துவ சிகிச்சைக்கான செலவில் ரூ.1 இலட்சம் வரை அரசே ஏற்கும். மக்களைத் தேடி மருத்துவம் என பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. மகளிருக்கு அரசு நகரப் பேருந்துகளில் இலவச பயணம் மேற்கொள்ள வழிவகை ஏற்படுத்தியதை தொடர்ந்து, ஏராளமான பெண்கள் பயனடைந்து வருகின்றனர். தமிழகத்தை குடிசை இல்லா மாநிலமாக மாற்ற ஏழை, எளிய வீடு இல்லாத மக்களுக்கு வீடு கட்டி வழங்கும் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் ஆட்சியில் மகளிருக்கு சொத்தில் சமஉரிமை, வேலைவாய்ப்பில் முன்னரிமை, உள்ளாட்சி அமைப்பில் 30 சதவீதம் இட ஒதுக்கீடு செயல்படுத்தப்பட்டன. அந்த வகையில், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தற்போது மகளிர் உரிமைத்தொகை வழங்கும் திட்டத்தை கொண்டுவந்துள்ளார்.

தமிழகத்தில் 10,000 கி.மீட்டர் சாலைகளை சீரமைக்க ரூ.4,000 நிதி ஒதுக்கீடு பெறப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. திண்டுக்கல் மாவட்டத்தில் ஊராட்சி ஒன்றிய சாலைகளை மேம்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

திண்டுக்கல் மாவட்டத்தில் அனைத்து சட்டமன்றத் தொகுதிகளிலும் அரசு கல்லூரிகள் உள்ளன. நத்தம் சட்டமன்ற தொகுதியில் விரைவில் அரசு கல்லூரி கொண்டு வரப்படும். "நான் முதல்வன்'' திட்டத்தில் மாணவ, மாணவிகளுக்கு தொழிற்பயிற்சி அளிப்பட்டதில் சுமார் 13 இலட்சம் பேர் பயனடைந்து வேலைவாய்ப்பு பெற்றுள்ளனர். விவசாயிகளுக்கு 1.50 இலவச மின் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன. இன்னும் 50 ஆயிரம் மின் இணைப்புகள் வழங்கப்படவுள்ளது. அரசு பள்ளிகளில் 6ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை படித்து உயர் கல்வி படிக்கும் மாணவிகளுக்கு மாதம் ரூ.1,000 உதவித்தொகை வழங்கும் புதுமைப்பெண் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. அரசுப் பள்ளிகளில் 1 முதல் 5ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவிகளுக்கு காலை சிற்றுண்டி வழங்கும் திட்டத்தின் மூலம் 31,000 பள்ளிகளைச் சேர்ந்த சுமார் 17.50 இலட்சம் குழந்தைகள் பயனடைந்து வருகின்றனர்.

தமிழகத்தில் குடும்ப அட்டை கேட்டு விண்ணப்பித்தவர்களில் தகுதியானவர்களுக்கு 15 நாட்களில் குடும்ப அட்டை வழங்கப்பட்டு வருகிறது. ஆட்சிப் பொறுப்பேற்ற 2 ஆண்டுகளில் தமிழகத்தில் இது வரை சுமார் 15 லட்சம் புதிய குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.

தமிழகத்தை குடிசை இல்லா மாநிலமாக மாற்ற ஏழை, எளிய வீடு இல்லாத மக்களுக்கு வீட்டு மனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டு பல்வேறு திட்டங்களின் கீழ் வீடு வழங்கப்பட்டு வருகிறது. 100 நாள் வேலை திட்டத்தில் இன்று நாளொன்றுக்கு ரூ.294 ஊதியம் வழங்கப்படுகிறது. இந்த சம்பளம் இன்னும் கூடுதலாக உயர்த்தி வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மேலும், வேலை நாட்களை 100 நாட்களில் இருந்து 150 நாட்களாக உயர்த்தி வழங்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. திண்டுக்கல் மாவட்டத்தில் ஊராட்சி ஒன்றிய சாலைகளை மேம்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**தொடர்ந்து ஆதரவு வழங்க வேண்டும்!**

குடிநீர், சுகாதாரம், சாலை வசதி, தெருவிளக்கு வசதி, கல்வி, பேருந்து வசதி, உணவு உள்ளிட்ட அடிப்படை தேவைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. எல்லோருக்கும் எல்லாம் கிடைக்க வேண்டும் என்ற உன்னத நோக்கத்துடன், பொதுமக்களின் எண்ணங்கள், எதிர்பார்ப்புகளை நிறைவேற்றும் வகையில் முதலமைச்சர் அவர்கள் தமிழக மக்களுக்கான பல்வேறு திட்டங் களை அறிவித்து, அவற்றை செயல்படுத்தி வருகிறார். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு அனைவரும் தொடர்ந்து ஆதரவு வழங்க வேண்டும்.

இவ்வாறு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி பேசினார்.

இவ்விழாவில், வேடசந்தூர் சட்டமன்ற உறுப்பினர் ச.காந்திராஜன், மாவட்ட மாவட்ட காவல் கண்காணிப்பாளர் வீ.பாஸ்கரன், திண்டுக்கல் ஊராட்சி ஒன்றியக்குழு தலைவர், அ.இராஜா, சாணார்பட்டி ஊராட்சி ஒன்றியக்குழு தலைவர், சு.பழனியம்மாள், திண்டுக்கல் வருவாய் கோட்டாட்சியர் கமலக்கண்ணன், மாவட்ட வழங்கல் அலுவலர் சிவக்குமார், மாவட்ட ஊராட்சிக்குழு உறுப்பினர் பரமேஸ்வரி, தோட்டனூத்து ஊராட்சி மன்றத் தலைவர், ஆர்.சித்ரா, ஊராட்சி ஒன்றியக் குழு உறுப்பினர் திருமதி கார்த்திகா, திண்டுக்கல் கிழக்கு வட்டாட்சியர் வில்சன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

### புதுக்கோட்டையில் - தமிழ்நாடு அரசின்

# இரண்டாம் கட்ட - கலைஞர் மகளிர் உரிமைத்திட்ட வங்கிக் கணக்குப் புத்தகம்!

## சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி வழங்கினார்!

புதுக்கோட்டை நவ.12-

புதுக்கோட்டை புதிய பேருந்து நிலையம் அருகே உள்ள கலைஞர் கருணாநிதி அரசு மகளிர் கலைக் கல்லூரியில் தமிழ்நாடு அரசின் இரண்டாம் கட்ட கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டத்திற்கான வங்கி கணக்கு புத்தகம் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. அதில் தமிழ்நாடு சட்டத் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, புதுக்கோட்டை வடக்கு மாவட்டக் கழக செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன், புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் வை.முத்துராஜா, நகர் மன்ற தலைவர் திலகவதி செந்தில் ஆகியோர் கலந்துகொண்டு பயனாளிகளுக்குஅந்ததிட்டத்திற்கான வங்கிக் கணக்கு புத்தகத்தினை வழங்கினர்.

இதன் பிறகு செய்தியாளர்களைச் சந்தித்த சட்டத் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி குறிப்பிட்டதாவது:-

ஆன்லைன் தடைச் சட்டத்திற்கு அரசாங்கம் சட்டம் இயற்றுவதற்கு எந்தவிதமான தடையும் இல்லை என்பதை நீதிமன்றம் தெளிவாக சொல்லி உள்ளது. ஆனால் தமிழ்நாடு ஆளுநர் அரசாங்கத்திற்கு உரிமை இல்லை என்று கூறியிருந்தார். நாங்கள் அவரிடம் எங்களுக்கு உரிமை உள்ளது என்பதை எடுத்துக் கூறியிருந்தோம். இந்நிலையில் இன்று நீதிமன்றம் கூறியதைப் போல் அரசு சட்டம் ஏற்றுவதற்கு உரிமை உள்ளது என்பதை உறுதிப்படுத்தி உள்ளது. இணைய வழி சூதாட்டம் ஒழுங்குமுறை படுத்துதல் தடை செய்தல் என்பதுதான் அந்த சட்டத்திற்கு பெயர். ஒழுங்குமுறை படுத்துவது என்பது எந்தெந்த விளை யாட்டுகளை எப்படி ஒழுங்கு முறைபடுத்த வேண்டும் அதற்கான குழுக்கள் அமைக்க வேண்டும் அந்த குழுக்களுக்கு மனுக்கள் போட்டு பரிசீலனை செய்து ஒழுங்குமுறைப்படுத்தி அந்த இணைய வழி விளையாட்டுகளை விளையாட அனுமதிக்க வேண்டும் என்பது முதலாவது கட்டம்.

**சட்டத்துறை பரிசீலனை செய்யும்!**

இரண்டாவது கட்டம் ரம்மி மற்றும் போகர். இந்த இரண்டு விளையாட்டுகளையும் தடை செய்ய வேண்டும். ஏனென்றால் அதில் பெரும்பாலான மக்கள் பணத்தை இழந்து தற்கொலைக்கு ஆளாகிறார்கள்.

ஆனால் நாங்கள் நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு ஏற்றவாறு அந்த வாதத்தை முன் வைக்கவில்லையோ என்று நாங்கள் நினைக்கிறோமே தவிர தீர்ப்பைப் பற்றி எதுவும் சொல்ல முடியாது, எங்களது வழக்கறிஞர்கள் வாதத்தை சிறப்பாக முன் வைத்திருந்தாலும் கூட நீதிபதி அந்தக் கருத்தை ஏற்றுக் கொள்ளும் வகையிலும் அவரை திருப்திப்படுத்தும் வகையிலும் கருத்துக்களை எடுத்து வைக்கவில்லையோ என்று எண்ணுவதைப் போல ஒரு தோற்றம்தான் வருகிறது தவிர வேறு எதுவும் கிடையாது.

தீர்ப்புகளைப் பற்றி விமர்சிக்கும் உரிமை எனக்கு கிடையாது. இந்த வழக்கில் மேல்முறையீடு செய்வது குறித்து சட்டத்துறை பரிசீலனை செய்யும். மேல் முறையீடு தேவை என்று சொன்னால் அதன்படி மேல்முறையீடு செய்வோம்.

இவ்வாறு அமைச்சர் எஸ்.ரகுபதி குறிப்பிட்டார்.



முதலமைச்சர் அவர்கள் நேற்று முன்தினம் (10.11.2023) சென்னை கலைவாணர் அரங்கத்தில், நடைபெற்ற விழாவில், புதிய பயனாளிகளாக தேர்ந்தெடுக்கப்பட்ட மகளிர் பயன்பெறும் வகையில், மகளிருக்கு மாதந்தோறும் ரூ.1000/- வழங்கிடும் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தை தொடங்கி வைத்தார்கள். அதனைத்தொடர்ந்து, புதுக்கோட்டை மாவட்டம், கலைஞர் கருணாநிதி அரசு மகளிர் கலைக் கல்லூரியில் நடைபெற்ற நிகழ்ச்சியில், சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி மகளிருக்கு வங்கி பற்று அட்டைகளை (ATM Card) வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஐ.சா.மெர்சி ரம்யா, புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மரு.வை.முத்துராஜா, முன்னாள் அரசு வழக்கறிஞர் கே.கே.செல்லபாண்டியன், புதுக்கோட்டை நகர்மன்றத் தலைவர் திருமதி.திலகவதி செந்தில், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.




முதலமைச்சர் அவர்கள் நேற்று முன்தினம் (10.11.2023) சென்னை கலைவாணர் அரங்கத்தில், நடைபெற்ற விழாவில், புதிய பயனாளிகளாக தேர்ந்தெடுக்கப்பட்ட மகளிர் பயன்பெறும் வகையில், மகளிருக்கு மாதந்தோறும் ரூ.1000/- வழங்கிடும் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தை தொடங்கி வைத்தார்கள். அதனைத்தொடர்ந்து, புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வக்கோட்டை பேருந்துநிலையம் எதிரில், செங்கிப்பட்டி சாலையில் உள்ள சண்முகா திரையரங்கத்தில், நடைபெற்ற நிகழ்ச்சியில், சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் மகளிருக்கு வங்கி பற்று அட்டைகளை (ATM Card) வழங்கினார். உடன் கந்தர்வக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் எம்.சின்னத்துரை, மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.மா. செல்வி, புதுக்கோட்டை வருவாய் கோட்டாட்சியர் முருகேசன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.

# கலைஞரும் நானும்

44

1984 இல் இந்திய ஆட்சிப்பணித் தேர்வுகளை தமிழில் எழுதி வெற்றிபெற்ற முதல் தேர்வாளர் ஆர்.பாலகிருஷ்ணன். சிந்துவெளி ஆய்வாளர். முத்தமிழ் அறிஞர் கலைஞரைச் சந்தித்து உரையாடிய தருணங்களை நெகிழ்ச்சியுடன் பதிவுசெய்கிறார்.

■ **ஆர்.பாலகிருஷ்ணன்,** ஐ.ஏ.எஸ் [ஓய்வு], சிந்துவெளி ஆய்வாளர்

## “திருவாரூர் மாப்பிள்ளையாமே!”



### முதல் சந்திப்பு

1976 ஆம் ஆண்டு கலைஞரை கோபாலபுரத்தில் அவரது இல்லத்தில் முதல்முறையாகச் சந்தித்தேன். எங்கள் கல்லூரி முத்தமிழ் அரங்கில் உரையாற்ற வரவேண்டும் என்று நான் வேண்டுகோள் விடுத்தபோது என்னை ஏற இறங்கப் பார்த்தார். கழக அரசு கலைக்கப்பட்டு நெருக்கடி நிலை அமலில் இருந்த காலகட்டம் அது. மதுரை யாதவர் கல்லூரியில் மு.தமிழ்க்குடிமகனின் மாணவராக இளங்கலை தமிழ் இலக்கியம் இரண்டாம் ஆண்டு படித்துவந்தேன். முத்தமிழ் மன்றத்தின் தலைவராக இருந்தேன்.

“இப்போது இருக்கும் அரசியல் சூழ்நிலையில் நீங்கள் என்னை அழைக்கக் கூடாது. நானும் வரக்கூடாது. கல்லூரிக்கும் நல்லதல்ல; உங்கள் எதிர்காலத்தையும் அது பாதிக்கும்” என்றார்.

நான் அப்போது ஸ்தாபன காங்கிரஸ் கட்சியில் தீவிரமான மேடைப்பேச்சாளர். ஆட்சிக்கலைப்பைத் தொடர்ந்து எனது அரசியல் நிலைப்பாட்டின் காரணமாக மதுரையில் உள்ள ஒரு முக்கியமான கல்லூரியிலிருந்து நீக்கப்பட்டு சிலமாதங்களுக்கு முன்புதான் யாதவர் கல்லூரியில் சேர்ந்திருந்தேன் என்பதை கலைஞரிடம் தெரிவித்தேன்.

கலைஞர் சிரித்து விட்டார். “அது போதாதா” என்று கேட்ட அவர் படிப்பில் கவனம் செலுத்தும் படி என்னை அறிவுறுத்தி அனுப்பிவைத்தார்.

1969 இல் பத்து வயதில் ஸ்தாபன காங்கிரஸ் கட்சியின் பேச்சாளராக மேடையேறியவன். 1973 திண்டுக்கல் நாடாளுமன்ற இடைத்தேர்தலின் போது ஒரு கிராமத்தில் எனது மேடைப் பேச்சை பெருந்தலைவர் காமராஜர் கேட்டார். என்னை தனது காரில் ஏற்றிச்சென்ற அவர் “பத்தாம் வகுப்பு படிக்கும் மாணவனுக்கு தேர்தல் பிரச்சார மேடையில் என்ன வேலை?” என்று கடிந்து கொண்டார். ”நன்றாக படித்து ஐ.ஏ.எஸ் அதிகாரியாகி நாட்டுக்கு நல்லது செய்” என்றார். ஐ.ஏ.எஸ் என்ற வார்த்தையை எனக்கு அறிமுகம் செய்ததே அவர் தான்.

மூன்று ஆண்டுகள் கழித்து அது போன்ற ஓர் அறிவுறுத்தலுடன் கலைஞர் மீண்டும் என்னை நெறிப்படுத்து கிறார். காமராஜர், கலைஞர் போன்ற மாபெரும் தலைவர்களின் கருத்தியல்கள் சந்திக்கும் ஒரு பொதுப்புள்ளி இருக்கிறது அதன் பெயர் “சமூக நீதி” என்ற புரிதல் காலப்போக்கில் எனக்குள் கைகூடி வழிநடத்துகிறது இப்போதும்.

### திருவாரூர் மாப்பிள்ளை

நான் 1984 இல் ஆட்சிப்பணிக்கு தேர்வாகி ஒடிசா சென்றுவிட்டேன். 1989 ஆம் ஆண்டு திமுக ஆட்சிக்கு வந்தபோது சட்டப்பேரவைத் தலைவராக எனது பேராசிரியர் தமிழ்க்குடிமகன். விடுமுறையில் சென்னை வந்திருந்த என்னை, முதல்வரை பார்ப்பதற்காக அழைத்துச் சென்றார். எதிர்பார்க்கவே இல்லை. ‘தமிழ்க்குடிமகன் உங்களைப் பற்றி அடிக்கடி குறிப்பிடுவார்’ என்ற கலைஞர் ‘நீங்கள் திருவாரூர் மாப்பிள்ளையாமே’ எனக் கேட்டு இன்னும் நெருக்கமாக உணரவைத்தார்.

1997 ஆம் ஆண்டு. காமராஜர் அரங்கம். இயக்குநர் பாரதிராஜாவின் நூல் வெளியீட்டு விழா. முதல்வர் கலைஞர், ஜி.கே மூப்பனார் கலந்து கொண்ட அந்த நிகழ்வில் மேடையில் நானும். மூப்பனார் என்னை நன்கறிந்தவர். கலைஞருக்கு என்னை அறிமுகம் செய்து வைத்தார். ”பாலகிருஷ்ணன் ஐ.ஏ.எஸ்” அவர் சொன்னதும் கலைஞர் உடனே ” தமிழ் இலக்கிய மாணவர், திருவாரூர் மாப்பிள்ளை” என்றார். எத்தனை ஆயிரம் பேரை சந்தித்திருப்பார்? எப்படி இப்படி நினைவில் வைத்து நெருக்கமாக உணரவைக்கிறார் என்று நினைத்துக்கொண்டேன்.

ஒடிசா மாநில முன்னாள் முதல்வர் பிஜு பட்நாயக் கலைஞர் மீது பெருமதிப்பு கொண்டவர். 1990- 1994 ஆண்டுகளில் மாநில நிதிக்கழகத்தின் மேலாண்மை இயக்குநராக நான் பணியாற்றிய போது அவரை அடிக்கடி சந்தித்திருக்கிறேன். என் மீது தனி அன்பு காட்டிய அந்த ”உயர்ந்த மனிதர்” 1979 இல் தி.மு.க -அ.தி.மு.க இணைப்பிற்கு தான் முயற்சி எடுத்தது பற்றி கூட என்னிடம் குறிப்பிட்டுள்ளார். தமிழ்நாட்டு அரசியலில் அவருக்கு ஒரு தனி ஈடுபாடு.

> ‘தமிழ்க்குடிமகன் உங்களைப் பற்றி அடிக்கடி குறிப்பிடுவார்’ என்ற கலைஞர் ‘நீங்கள் திருவாரூர் மாப்பிள்ளையாமே’ எனக் கேட்டு இன்னும் நெருக்கமாக உணரவைத்தார்.



1994 ஆம் ஆண்டு நான் ஒன்றிய அரசுப்பணியில் சென்னை வந்துவிட்டேன். ஆனாலும் ஒடிசா முதல்வர் எனக்கு புவனேஸ்வரத்தில் ஒரு வீட்டு மனை ஒதுக்கீடு செய்தார். ”ஓய்வுபெற்றதும் தமிழ்நாட்டிற்கு வந்துவிட வேண்டும்” என்பதில் உறுதியாக இருந்ததால் “அந்த வீட்டு மனை எனக்கு வேண்டாம்” என்று பிடிவாத மாக எழுதிக்கொடுத்து விட்டேன்.

கலைஞர் முதல்வராக இருந்தபோது தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் 1998 இல் எனக்கு ஒரு வீட்டு மனையை அரசு நிர்ணயித்த விலையில் ஒதுக்கீடு செய்தது. இதற்கு காரணம் சென்னையில் வசித்த காந்தியவாதியும் சமூகத் தொண்டருமான ஷோபா காந்த தாஸ். அவர் பீகார் மாநிலத்தைச் சேர்ந்தவர். தேசியத்தலைவர் ஜெயப்பிரகாஷ் நாராயணனின் நம்பிக்கைக்கு உரியவர். நெருக்கடிநிலை காலத்தில் பல வட இந்தியத்தலைவர்கள் தமிழ்நாட்டில் தங்க உதவிசெய்தவர்; கலைஞருக்கு நெருக்கமானவர். என்மீது அன்புகொண்டவர்.

கலைஞரை நேரில் பார்த்து திரும்பிய அவர் ஒடிசாவிலிருந்த என்னை தொலைபேசியில் அழைத்து “ நீங்கள் தமிழ் மாணவர், திருவாரூர் மாப்பிள்ளை” என்றெல்லாம் சொல்கிறார் அவரை தெரியும் என்று நீங்கள் சொல்லவே இல்லையே என்றார். ”அவரை எல்லோருக்கும் தெரியும்; என்னை அவர் நினைவில் வைத்திருப்பார் என்று எனக்கு எப்படித் தெரியும்” என்று திருப்பிக்கேட்டேன்.

2004 ஆம் ஆண்டு. ஒடிசா மாநிலத்தின் தலைமைத் தேர்தல் அதிகாரியாக இருந்தேன். மனைக்கான மாதத்தவணைகளை கட்டிமுடித்த கையோடு கலைஞரைச் சந்திக்க சென்னை வந்தேன். அப்போது அவர் எதிர்க்கட்சித்தலைவர். வந்த நோக்கத்தைச் சொல்லி “நன்றி” தெரிவித்தேன். “அப்படியா நினைவில்லையே” என்று அருகிலிருந்த சண்முகநாதனிடம் கேட்டார். அவர் உறுதிசெய்ததும் ”எனக்கு நினைவில் இல்லை. நினைவில் இருக்கவும் கூடாது. ஆனாலும் நீங்கள் மறக்காமல் நன்றி சொல்லவந்ததும் சரி தான். மகிழ்ச்சி” என்றார். பிறகு எனது பணி குறித்து விசாரித்தார். பிஜு பட்நாயக் பற்றிய நினைவுகளையும் பகிர்ந்துகொண்டார்.

### கலைஞர் மகிழ்வார்

2007 ஆம் ஆண்டு. டில்லியில் இந்தியத் தேர்தல் ஆணையத்தில் துணை ஆணையராக பணியாற்றி வந்தேன். சிந்துவெளிப் பண்பாடு குறித்து தொடர்ச்சியாக ஆய்வுகள் செய்து வந்த நான், சங்க இலக்கியம் குறிப்பிடும் நூற்றுக்கணக்கான தமிழ் அடையாள இடப்பெயர்கள் சிந்துவெளிப்பண்பாட்டு நிலப்பகுதிகளில் இன்றும் வழக்கில் இருப்பதைக் கண்டறிந்தேன். ”இந்த ஆதாரங்களை கலைஞர் அறிந்தால் எவ்வளவு மகிழ்ச்சி அடைவார்” என்று கூறினார் என் மனைவி.

2008 ஆம் ஆண்டு மடிக்கணினி தரவுகள், வரைபடங்களுடன் கலைஞரை அவரது வீட்டில் சந்தித்தேன். இந்த புதிய தகவல்கள் வியப்பாக இருக்கிறதே என்றவர் இதை நீங்கள் அறிஞர்கள் அவையில் பெருந்திரையில் விளக்கவேண்டும் என்றார். 2010 ஆம் ஆண்டு கோவை செம்மொழி மாநாட்டில் ஆய்வுரை நிகழ்த்த அழைப்பு வந்தது. அஸ்கோ பர்போலா, ஐராவதம் மகாதேவன் ஆகியோர் அமர்ந்திருந்த ஆய்வரங்கில் சிந்துவெளியின் “கொற்கை, வஞ்சி, தொண்டி வளாகத்தை” உலகுக்கு அறிவித்த அந்தத் தருணம் இன்றும் நினைவில். கலைஞர் அளித்த யோசனையை அவர் கூட்டிய செம்மொழி மாநாட்டில் நிறைவேற்றி நிறைவாக உணர்ந்தேன்.

### மகத்தான கலைஞர்

‘‘கலைஞர் மறைந்தார்’’ என்ற செய்தி வெளியானபோது நான் ஒடிசா மாநில முதல்வர் மற்றும் பல உயரதிகாரிகளுடன் ஒரு முக்கியமான நிகழ்வில் மும்பையில் இருந்தேன். மனம் சென்னையில் இருந்தது. புகழ்பெற்ற ஒடிசா மாநில மணல்சிற்பக் கலைஞர் பத்மஸ்ரீ சுதர்சன் பட்நாயக்கை தொலைபேசியில் அழைத்தேன். எனது மனஓட்டத்தை நொடியில் புரிந்து கொண்டார். ஒடிசாவில் வங்கக் கடற்கரையில் கலைஞரின் மணற்சிற்பத்தை உருவாக்கினார். சென்னையில் வங்கக்கடற்கரையில் அவர் துயில்வதற்கு இடம்கோரி சட்டப் போராட்டம் நடந்து கொண்டிருந்தபோது, அதே வங்கக் கடற்கரையில் ஒடிசாவில் அவரது மணச்சிற்பம். மும்பையில் அரபிக்கடலோரம் அந்த மாபெரும் விடுதியின் அரங்கில் இருந்தபடி மணற்சிற்பத்திற்கு TRIBUTE TO KALAIGNAR THE LEGEND 1924 – 2018 என தலைப்பு எழுதி குறுந்தகவல் அனுப்பினேன். அந்த மணற்சிற்பம் இப்போது படமாகத்தான் இருக்கிறது. ஆனால் மகத்தான மக்கள் தலைவர் கலைஞர் என்கிற மனச்சித்திரம் எனக்குள் பாடமாக இருக்கிறது.

...பகிர்வார்கள்

## ஆழமான போலி [DEEP FAKE] என்கிற ஆபத்து

கடந்த 400 ஆண்டுகளில் அறிவியல் பெருமளவு முன்னேறியுள்ளது.நம்மால் கற்பனை செய்ய முடியாதவற்றை அறிவியல் சாத்தியமாக்கி உள்ளது. இருப்பினும் உலகில் உள்ள பிரச்சினைகள் தீர்ந்து மக்கள் மகிழ்வோடு வாழ இயலவில்லை. காரணம், நவீன அறிவியலின் கண்டுபிடிப்புகள் அனைத்தும் லாப நோக்குடைய முதலாளித்துவ, தனியார்மய, பெருநிறுவனங்களின் கைகளில் உள்ளன. ஆளும் அரசுகளில் பெரும்பான்மையான அரசுகள் மக்கள் நலனுடன் இல்லை. அதனால்தான், அணுகுண்டு போன்ற பயங்கரமான ஆயுதங்கள் பல டிரில்லியன் டாலர்களை செலவழித்துத் தயாரிக்கப்படுகின்றன.

அதேபோல், பல நூற்றாண்டு கால மனித உழைப்பின் உச்சபட்ச கண்டுபிடிப்பு கணினி. அதன் பயன்பாடுகளும் மனித இனத்திற்கு முழுமையாகச் சென்றடையவில்லை. மாறாக, மக்களை ஒடுக்குவதற்கும், சுரண்டுவதற்கும், ஏமாற்றுவதற்கும், லாப வெறிக்குமே பயன்படுத்தப்படுகிறது.

நவீன கணினி அறிவியலின் கண்டுபிடிப்புகளில் ஒன்றாக DEEP FAKE ஐ பயன்படுத்தி, தற்போது போலியாக சித்தரிக்கப்பட்டு, அது தொடர்பான காட்சிகள் இணையத்தில் வெளிவருகின்றன. பலர் அதன் ஆபத்துகளைச் சுட்டிக்காட்டி பேசுகின்றனர், எழுதுகின்றனர்.

ஃபேஸ்புக், எக்ஸ் X போன்ற செயலிகளாக இருக்கட்டும், செயற்கை நுண்ணறிவு (Artificial Intelligence), Deep Fake போன்ற தொழில்நுட்பங்கள் அனைத்தும் பெரும்பான்மை மனிதர்களை ஏமாற்றுவதற்கும், அவர்களைக் கிறுக்கர்களாக மாற்றுவதற்குமே பயன்படுத்தப்படுகின்றன. இந்தப் போலிகளில் கவனமாக இருக்கப் பழகுவோம்.

**-எஸ்.விஜயபாஸ்கர் பதிவிலிருந்து**

## ஃப்ளாஷ்பேக்





நடராஜன்

### பிரம்புநார் பெரிய கோயில்!

கழகப் பொன் விழா 1999-ஆம் ஆண்டு பாளையங்கோட்டையில் சிறப்பாக நடைபெற்றது. அந்த விழாவில் செங்கோட்டை நகர தி.மு.கழகம் சார்பாக பிரம்புநார் கொண்டு பின்னிச் செய்த தஞ்சை பெரிய கோயில் சிற்பத்தை, தலைவர் கலைஞர் அவர்களுக்குப் பரிசளிக்க மேடைக்குச் சென்றோம். அதனைக் கண்ட தலைவர் இன்முகத்துடன் வரவேற்று, பிரம்பு நாரால் செய்த முறையினை எங்களிடம் விளக்கமாகக் கேட்டறிந்தார். அப்படியான சமயத்தில் எடுக்கப்பட்ட புகைப்படம் இது. இப்படத்தை என் வாழ்நாள் பொக்கிஷம் என்றே எண்ணுகிறேன்.

**-தில்லை கே.நடராஜன்,**
**நகர கழகப் பொருளாளர்,**
**செங்கோட்டை.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறு குறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி:
அன்பகம், 614, அண்ணா சாலை,
தேனாம் பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033-24473
மின்னஞ்சல் youthwing@dmk.in


## கருவூலம்

### சாதித் துறப்பு!

**1945-ஆம் ஆண்டு டிசம்பர் 9-ஆம் தேதியிட்ட ‘குடிஅரசு’ இதழில், சாதிப் பெயர் துறக்க அழைப்பு விடுக்கிறார் பெரியார். ‘‘திராவிடர் கழகத்தின் புது வருட வேலைத் திட்டமாக திராவிடர் கழக அங்கத்தினர்கள் ஒவ்வொருவரும் அவரவர்கள் சொந்த தன்மையில் அனுசரிக்க வேண்டிய வேலைத் திட்டங்கள், 1.மதக் குறியை அணியாதிருத்தல், 2.சாதிப் பட்டங்களைத் தங்கள் பெயர்களோடு சேர்க்காதிருத்தல்’’ என அறிவிக்கிறார். இவற்றை நடைமுறைக்குக் கொண்டு வந்ததும், மற்ற திட்டங்கள் அறிவிக்கப் படும் என்றது ‘குடிஅரசு’.**

## திராவிடத்தால் வாழ்கிறோம்

298




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/21 - 23 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/21-23. Phone : 28179191, 28179131